

වාර්ෂික වාර්තාව
ஆண்ட றிக்கை
ANNUAL REPORT

2021

පොල් පර්යේෂණ ආයතනය
தென்னை ஆராய்ச்சி நிறுவகம்
Coconut Research Institute

පොල්, කිතුල් සහ තල් වගා ප්‍රවර්ධනය සහ ආශ්‍රිත කාර්මික භාණ්ඩ නිෂ්පාදන හා කර්මාන්ත අපනයන විවිධාංගීකරණ රාජ්‍ය අමාත්‍යාංශය
தென்னை, கித்துல் மற்றும் பனைச் செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
STATE MINISTRY OF COCONUT, KITHUL AND PALMYRAH CULTIVATION PROMOTION AND RELATED INDUSTRIAL PRODUCT MANUFACTURING AND EXPORT DIVERSIFICATION

වැවිලි අමාත්‍යාංශය
பெருந்தோட்ட அமைச்சு
Ministry of Plantation



உள்ளடக்கம்

- எமது நோக்கு, எமது பணிக்கூற்று மற்றும் எமது பங்களிப்பு 5
- நிறுவனத்தின் நிர்வாக கட்டமைப்பு 6
- தென்னை ஆராய்ச்சி நிறுவனம் 7
- தவிசாளரின் செய்தி 9
- பணிப்பாளரின் செய்தி 11
- ஆய்வுப் பரிந்துரைகள் 13
- செயல்திட்ட முன்மொழிவுகள் 17
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மேற்கோள்கள் 21
  - தென்னை இன மேம்பாடு 23
  - தெங்கு உற்பத்தி தொழினுட்பம் 27
  - காலநிலை மாற்றத்தினால் தெங்கு உற்பத்தியில் ஏற்படும் பாதிப்பு 38
  - பயிர் பாதுகாப்பு 41
  - தெங்கு பதனீடு மற்றும் உற்பத்திப் பொருள் உருவாக்கம் 47
  - சமூகப் பொருளியல் 56
- விருத்தி செய்யப்படுகின்ற ஆய்வுகள் 61
- தொழினுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள் 69
- அக்கறை செலுத்துவோருக்கு சேவை வழங்குவதன் ஊடாக தேசிய அபிவிருத்தியில் பங்களிப்பு 77
- தேசிய ஒன்றிணைப்பு 87
- தோட்ட முகாமைத்துவச் செயற்பாடுகள் 91
- ஊழியர்கள் 121
  - தென்னை ஆராய்ச்சி நிறுவன ஊழிய அங்கத்தவர்கள் 123
  - ஆட்சேர்ப்புக்கள், இளைப்பாறல்கள், பதவி விலகல்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாறல்கள் 139
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 147
- ஊழியர் சாதனைகள் 158
- கல்விசார் மற்றும் தொழில்சார் செயற்பாடுகள் 161
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பதிப்புக்கள் 169
- நிதிச் செயற்பாட்டு அறிக்கை 177



எமது நோக்கு

தெங்கு ஆராய்ச்சி, தொழினுட்ப விருத்தி மற்றும் இந்த பிராந்தியத்திற்கான தொழினுட்ப பரிமாற்றல் ஆகியனவற்றில் சிறந்து விளங்கும் மத்திய நிலையமாக திகழ்தல்.


எமது பணிக்கூற்று

தென்னையின் உற்பத்தி மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதனூடாக அறிவு மற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.

எமது பங்களிப்பு

- தென்னை மற்றும் ஏனைய பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் வளர்ச்சி, தென்னந்தோட்டங்களில் விலங்கு வேளாண்மையினை முன்னெடுத்தல் மற்றும் நோய்கள் மற்றும் பீடைகளிலிருந்து பாதுகாத்தல் மற்றும் குணப்படுத்தல் தொடர்பிலான மேலதிகமான ஆய்வுகளை முன்னெடுத்தல்.
- தெங்கு உற்பத்திகள் மற்றும் பெறுமதி சேர்ப்பினை பயன்படுத்தல் மற்றும் தெங்கு பதனிடல் தொடர்பிலான மேலதிகமான விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை முன்னெடுத்தல்.
- நிறுவனத்தின் விதை தோட்டங்கள் மற்றும் பரிசோதனை நிலையங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- தெங்குத்துறைக்கு உதவுவதற்காக ஆலோசக மற்றும் விரிவாக்க ஊழியர்களை பயிற்றுவித்தல்.
- தெங்குத் துறை சார்ந்த அனைத்து விடயங்களினதும் தொழினுட்ப தன்மை தொடர்பில் வழிகாட்டல் மற்றும் அறிவுரை வழங்கல்.

நிறுவனத்தின் நிர்வாக கட்டமைப்பு



தென்னை, கித்துல் மற்றும் பனைச் செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

தென்னை ஆராய்ச்சி நிறுவனம்

ஆண்டறிக்கை - 2021

தென்னை ஆராய்ச்சி நிறுவனமானது 1928 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க தெங்கு ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1929 ஆம் ஆண்டு தெங்கு ஆராய்ச்சி திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. பிறப்புரிமையியல், இரசாயனவியல் மற்றும் மண் இரசாயனவியல் ஆகிய 3 தொழினுட்ப பிரிவுகளுடன் இத்திட்டத்தின் தலைமையகமானது லுணுவிலவில் உள்ள பண்டிரிப்புவ தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க தெங்கு ஆராய்ச்சி சட்டத்தினை தொடர்ந்து இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டு 46 ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் முகாமைத்துவ சபையாக செயற்படுவதற்காக தென்னை ஆராய்ச்சி சபை 1972 இல் நிறுவப்பட்டது.

தென்னை ஆராய்ச்சி சபை

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாக அமைப்பாக தென்னை ஆராய்ச்சி சபை விளங்குகிறது. தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் தென்னை ஆராய்ச்சி சபையின் 11 அங்கத்தவர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுகிறார்கள். சபைத் தலைவராக அங்கத்தவர்களில் ஒருவர் நியமிக்கப்படுகின்றார். அங்கத்தவர்கள் மூன்று வருடங்களுக்கு பதவி வகிப்பதுடன் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவர்களாவர். இந்த வருடத்தில் ஒன்பது சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

சபை அங்கத்தவர்கள்		வரவுப் பதிவு
திரு. ஜயந்த விக்ரமசிங்க, தவிசாளர்/ தெ. ஆ. ச	(ஜன-மே 2021)	- 5/5
வைத்திய கலாநிதி. சாரங்க அழகபெரும, தவிசாளர்/ தெ. ஆ. ச	(ஆக-டிச 2021)	- 4/4
திருமதி. ஏ. வீ. கே. எம். ஹேரத், தவிசாளர்/ தெ. ப. ச		- 1/2
திரு. கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க, தவிசாளர் / தெ. அ. ச		- 2/2
திருமதி. சுரேகா அத்தநாயக்க/ அமைச்சுப் பிரதிநிதி	(ஜன-மே 2021)	- 5/5
திருமதி. டீ. எஸ். விஜேசேகர/ அமைச்சுப் பிரதிநிதி	(ஆக-செப் 2021)	- 2/2
திருமதி. கே. கருணாசேன/ அமைச்சுப் பிரதிநிதி	(நவ-டிச 2021)	- 2/2
கலாநிதி. டபிள்யூ. எம். டபிள்யூ. வீரகோன், பணிப்பாளர் நாயகம்/வி.தி	(ஜன-மே 2021)	- 2/5
கலாநிதி. எஸ். எச். எஸ். ஏ. டீ சில்வா, ப. நா/ வி. தி	(நவ-டிச 2021)	- 2/2
கலாநிதி. எஸ். எவ். என். சில்வா, தெ. செ. ச. பிரதிநிதி		- 9/9
திரு. ஆர். ஏ. எல். உதய குமார/ திறைசேரி பிரதிநிதி		- 9/9
திரு. பந்துல ஏகொடஹே		- 9/9
திரு. பிரபாத் விமல் குமார/ பணிப்பாளரது செயலாளர்/ வி. ஆ. கொ. சு		- 6/9
திரு. சித்ரல் ஜயவர்ண		- 9/9
கலாநிதி. (திருமதி.) சனாதனி ரணசிங்க, பணிப்பாளர்/ தெ. ஆ. நி		- 9/9

தெ.ஆ.ச : தென்னை ஆராய்ச்சி சபை
வி.தி : விவசாய திணைக்களம்
வி.ஆ.கொ.ச : விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை
தெ.அ.ச : தெங்கு அபிவிருத்தி சபை
தெ.ஆ.நி : தென்னை ஆராய்ச்சி நிறுவனம்
தெ.செ.ச : தெங்கு செய்கையாளர்கள் சங்கம்
தெ.ப.ச : தென்னை பயிர்ச்செய்கை சபை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்களுக்காக இவ்வருடத்தில் நான்கு சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள்

	பெயர்	**வரவுப் பதிவு**
தவிசாளர் மற்றும் திறைசேரி பிரதிநிதி	திரு. ஆர். ஏ. எல். உதய குமார	4/4
அமைச்சுப் பிரதிநிதி	திருமதி. சுரேகா என் அத்தநாயக்க	2/4 (ஜன-மே 2021)
	திருமதி. புத்தி ரீ கருணாசேன	2/4 (நவ-டிச 2021)
பெருந்தோட்ட அமைச்சின் பார்வையாளர்	திரு. ஏ. பொடிராளகாமி	2/4
சபை உறுப்பினர்	கலாநிதி. எஸ். எவ். என். சில்வா	4/4
கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் பார்வையாளர்	திருமதி. ஆர். எம். எம். எஸ். பெரேரா	4/4
பணிப்பாளர்/ தெ. ஆ. நி	கலாநிதி. (திருமதி.) சனாதனி ரணசிங்க	4/4
உள்ளக கணக்காய்வாளர்	திரு. பி. டபிள்யூ. ஏ. பிரணாந்து	4/4
ஒருங்கமைப்பாளர், தெ.ஆ.நி / கணக்காய்வு குழு, மேலதிகப் பணிப்பாளர்/ தெ. ஆ. நி	கலாநிதி. லலித் பெரேரா	4/4



தவிசாளரின் செய்தி

கடந்த சில ஆண்டுகளாக தெங்கு கைத்தொழில் துறையானது தேங்காய் உற்பத்தி, தெங்கு பதப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் விருத்தி ஆகியனவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளை குறிக்கும் வகையில் ஏற்றப் படிநிலையினை அடைந்திருக்கிறது. 2021 ஆம் ஆண்டில் கொரோனா நோய்த்தொற்று நிலை காணப்பட்ட போதிலும் பெருந்தோட்ட அமைச்சின் ஈடுபாடு மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை ஆகிய நிறுவனங்களின் மத்தியஸ்தத்துடன் தெங்கு கைத்தொழில் துறை சிறந்த முறையில் இயங்கியது. இந்த ஆண்டு காலப்பகுதியில் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியானது அண்மைக்காலத்தில் பதிவாகிய அதியுயர் எண்ணிக்கையான 3,382 மில்லியன் காய்கள் என்ற அளவினையும் ரூ. 166 பில்லியன் (834 மில்லியன் அமெ. டொலர்) அந்நியச் செலாவணியினை வருமானத்தினையும் அடைந்தது. இதற்கு மேலதிகமாக தெங்குக் கைத்தொழில்துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தி வருவாயில் 0.7% பங்களிப்பினை வழங்கியதுடன் உள்நாட்டில் சமையலுக்கான தேங்காயிற்கான கேள்வியினையும் பகுதியளவில் தேங்காய் எண்ணைக்கான கேள்வியினையும் பூரணப்படுத்தியுள்ளது. பயிர் தொடர்பிலான எதிர்வுகூறல் தரவுகள், பயிர்ச்செய்கை தொடர்பில் தேவைப்படுகின்ற தொழினுட்ப பரிந்துரைகள், தென்னந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் கைத்தொழில்துறையினை முகாமை செய்வதற்கான செயல்திட்ட பரிந்துரைகள் ஆகிய வழங்கப்படும் செயன்முறைகளில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலையீடு காணப்பட்டது என்பனை நான் பெருமையுடன் குறிப்பிடுகின்றேன்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு செய்கையினை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களை பின்பற்றல், பயிர் உற்பத்தியினை அதிகரித்தல், தென்னை மரங்களை பாதுகாப்பதன் மூலம் பயிர் இழப்பினை இழிவாக்கல், சர்வதேச தெங்கு பதனீட்டு கைத்தொழில் துறையுடன் போட்டியிடக்கூடிய உற்பத்தி பொருட்களை உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல், பொருத்தமான கொள்கைகளின் மூலம் தெங்குத் துறையின் செயற்பாட்டினை விருத்தியாக்கல் போன்ற பல்வேறு துறைகளின் கீழ் தனது ஆராய்ச்சித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கிறது. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்கின்ற அதே சந்தர்ப்பத்தில் அசேதன உரத்தின் தேவைப்பாட்டுக்கான பிற்சேர்க்கையாக சேதன உரத்தின் பரிந்துரை மற்றும் மண்ணின் தர மேம்பாடு மற்றும் மண் சீரமைப்பு ஆகியவற்றுக்கான உயிர்க்கரி பயன்பாடு ஆகியன தொடர்பில் புதிய 2 பரிந்துரைகள் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழினுட்பங்கள் பரப்பப்படுவதன் முக்கியத்துவம் அடையாளம் காணப்பட்ட அதேவேளை தெங்கு தொடர்பில் அக்கறையுடையோருக்கு தொழினுட்பங்களை பரிமாற்றுவதற்கு புதிய கருவிகள் மற்றும் அணுகுமுறைகள் என்பன தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டன. இந்த குறிக்கோளினை கவனத்திற் கொண்டு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் புதிய வலையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டதுடன் துரித இலக்கம் மற்றும் வட்ஸப் இலக்கம் ஆகியனவும் அறிமுகப்படுத்தப்பட்டன. இலத்திரனியல் ஊடகம் இதற்கான கருவியாக பயன்படுத்தப்பட்டது. காணொளிகளை உள்ளடக்கிய QR குறியீடுகளை கொண்ட தெங்குத் தொழினுட்ப கையேடொன்று அச்சிடப்பட்டதுடன் தெங்கு தொடர்பில் அக்கறையுடையோருக்கு பகிரப்பட்டது. சர்வதேச சந்தையில் இலங்கை தென்னையின் அங்கீகாரத்தினை அதிகரிப்பதனை நோக்காக கொண்டு சிலோன் தென்னை என்ற புதிய இலட்சினை தென்னை ஆராய்ச்சி நிறுவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. கலப்பின தென்னை நாற்றுக்களின் கேள்வியினை திருப்திப்படுத்துவதற்காக உயர் விளைச்சலினை தருகின்ற கலப்பின தென்னை உற்பத்தியினை அதிகரிப்பதற்கான உடனடி தேவை காணப்பட்டது. இந்த வகையில் 2021 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் ஒன்றிணைந்து புதிய கலப்பின விதைத் தோட்டமொன்று ஸ்தாபிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் கலப்பின

விதைத் தேங்காய்களின் உற்பத்திக்காக 1000 தாய்த் தாவரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் கை மகரந்த சேர்க்கை மூலம் விதைத் தேங்காய்களை உற்பத்தி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட சிலாப பெருந்தோட்டக் கம்பனியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

பல்கலைக்கழகங்கள், தேசிய பொறியியல் நிறுவனங்கள் ஆகியன உள்ளடங்களாக ஏனைய உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நிதியளிப்பு முகவர் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை வினைதிறனாக தொடர்வதற்காக ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து வருகிறது. ஆராய்ச்சிகளின் ஊடாக தோற்றுவிக்கப்படுகின்ற புதிய அறிவாற்றலானது இறுதி பயனாளர்கள் மற்றும் அக்கறையுடையோருக்கு பரிமாற்றப்படல் அவசியமானதாகும். உருவாக்கப்பட்ட அறிவாற்றலானது அக்கறையுடையோருக்கு பரிமாற்றப்படுவதற்காகவும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிரதான தொழினுட்ப பரிமாற்றல் அமைப்பில் இருந்து பின்னூட்டல்களை பெறுவதற்காகவும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆராய்ச்சிகள் மற்றும் விரிவாக்க கலந்துரையாடல்கள் என்பன தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தென்னையின் சர்வதேச அறிவு வங்கியாக அங்கீகரிக்கப்படுகின்ற அதேவேளை தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச சான்றிதழ் கற்கைநெறியினை 3 ஆவது முறையாக தொடர்ந்து நடாத்துவதற்காக சர்வதேச தென்னை சம்மேளத்தினால் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பௌதீக அளவில் இடம்பெறுகின்ற இந்த நிகழ்வு கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக நிகழ்நிலையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் பல நிகழ்ச்சிகள், தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்கள், மாநாடுகள் மற்றும் நாட்டின் பல செயலாக்கங்களுக்கு வளவாளர்களாக பணியாற்றியுள்ளனர். தென்னை ஆராய்ச்சி நிறுவனமானது உள்நாட்டு மற்றும் உலக நாடுகளின் தெங்குத் துறையைப் பூர்த்தி செய்வதற்கும் விஞ்ஞானத்தை மேம்படுத்துவதற்கும் தனது அறிவு அடித்தளத்தை விரிவுபடுத்துவதும் பணியில் ஈடுபட்டுள்ளது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

வைத்திய கலாநிதி. சாரங்க அழகபெரும

தவிசாளர், தென்னை ஆராய்ச்சி சபை



பணிப்பாளரின் செய்தி

2021 ஆம் ஆண்டின் வருடாந்த தெங்கு விளைச்சல் மற்றும் தெங்கு ஏற்றுமதி வருமானம் ஆகியனவற்றில் தெங்குத் துறை வரலாற்று சாதனையினை பதிவு செய்திருக்கிறது. இதுவரை காலமும் பெறப்பட்ட வருடாந்த தேசிய தேங்காய் விளைச்சலில் அதியுயர் அளவான 3,383 மில்லியன் காய்கள் இந்த ஆண்டில் நம் நாட்டில் உற்பத்தியாக கிடைக்கப் பெற்றதுடன் தென்னை சார் பெறுமதி சேர் ஏற்றுமதிகளின் ஊடாக பெறப்பட்ட இதுவரை காலத்திலும் பெறப்பட்ட அதியுயர் வருவாயான 834 மில்லியன் அமெரிக்க டொலரும் ஈட்டப்பட்டது. தெங்குத் துறையில் அக்கறையுடையோருக்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்ட ஆராய்ச்சி பரிந்துரைகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் சேவைகள் என்பன தெங்கு கைத்தொழிலின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் விலை மதிப்பற்ற உள்ளீடாகவே விளங்குகிறது.

பசளை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும் என அரசினால் வெளியிடப்பட்ட புதிய அரச கொள்கைக்கு அமைவாக பல்வேறுபட்ட சேதன பொருட்களை உள்ளடக்கிய உரத்தொகுப்பொன்று பரிந்துரைக்கப்பட்டதுடன் தென்னைப் பெருந்தோட்ட மண்ணின் தரத்தினை மேம்படுத்துவதற்கு உயிர்க்கரி பயன்படுத்தப்படுவது இடைக்கால பரிந்துரையாக வழங்கப்பட்டது. வெலிகம தென்னோலை வாடல் நோய், ஏசிரியா சிற்றுண்ணி மற்றும் வெப்பமான அல்லது வறட்சி அழுத்தத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தென்னை இனங்களை கண்டறிதல் மற்றும் உருவாக்கல், இழைய வளர்ப்பு தொழினுட்பத்தினை மேம்படுத்தல், உயிர்க்கரி மற்றும் மாநகர திண்மக் கழிவினை தென்னை பெருந்தோட்டங்களில் பயன்படுத்தல், புதிய பத்திரக்கலவையிடல் பதார்த்தங்களை கண்டறிதல், பெறுமதி சார் தெங்கு உற்பத்தி பொருட்களுக்கான தொழினுட்பத்தை விருத்தி செய்தல், தும்புத் துறையில் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்களை உருவாக்கல் அல்லது மேம்படுத்தல் மற்றும் தேங்காய் எண்ணை, பதனீர் சார் உற்பத்திகளின் உடல் ஆரோக்கியப் பயன்களை ஆய்வு செய்தல் ஆகியன தொடர்பிலான ஆராய்ச்சிகள் திருப்திகரமான அளவில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்று மரபியல் வள நிலையங்களும் திருப்திகரமான அளவில் பராமரிக்கப்பட்டதுடன் தேசிய மீள் நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக பிறப்புரிமையியல் ரீதியான உயர் தரத்திலான 1.3 மில்லியன் விதை தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் விதைத் தோட்டங்களில் கை மூலமான மகரந்தச் சேர்க்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1,000 தாய் தென்னை மரங்களினை கொண்ட புதிய ஒரு தொகுதி இணைக்கப்பட்டதுடன் கலப்பின விதைத் தேங்காய்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக தனியார் துறை மற்றும் குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி ஆகியனவற்றுடன் பங்குடமை செயற்றிட்டங்கள் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டன. வெலிகம தென்னோலை வாடல் நோய் ஏனைய பகுதிகளுக்கு பரவுவதை தடுப்பதற்காக தென் மாகாணத்தில், குறிப்பாக பாதுகாப்பு வலயத்தினுள் இந்நோயினை கட்டுப்படுத்தப்படுவது தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டின் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் எதிர்வு கூறலான 3,353 மில்லியன் காய்களுடன் ஒப்பிடும் போது 3,383 மில்லியன் காய்கள் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான தென்னையின் விளைச்சல் 2,337 மில்லியன் காய்களாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தொழினுட்ப பரிமாற்றல் செயற்பாடுகளாக தெங்கு தொடர்பில் அக்கறையுடையோருக்கு தொழினுட்ப அறிவுரைகள் மற்றும் தகவல்களை அளிப்பதற்காக புதிய துரித எண் 1928 மற்றும் வட்ஸ்அப் இலக்கம் 070 400 1928 ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிகள் மற்றும் தெங்கு சார் உற்பத்தி பொருட்களின் உருவாக்கம் தொடர்பிலான நேரடி அனுபவத்தினை வழங்குவதற்காக வணிக அடைகாத்தல் வசதி தொடர்ந்தும் அளிக்கப்பட்டதுடன் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபையின்

தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடையே இரு ஆராய்ச்சி விரிவாக்க கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இலங்கையின் தெங்கு தொடர்பில் அக்கறையுடையோருக்காக தென்னை பயிர்ச்செய்கை மற்றும் பெறுமதி சேர்ப்பு தொடர்பிலான சான்றிதழ் கற்கைநெறி இவ்வருடம் நிகழ்நிலை நிகழ்ச்சியாக நடாத்தப்பட்டது.

தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 3 ஆவது சர்வதேச சான்றிதழ் கற்கைநெறி, தெங்குச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற 19 நாடுகளின் 38 சர்வதேச பங்கேற்பாளர்களுக்காக சர்வதேச தென்னை சம்மேளனம் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து கூட்டாக ஒருங்கமைக்கப்பட்டது. பத்தொன்பது வானொலி நிகழ்ச்சித் தொடர்கள் நடாத்தப்பட்டன. தொழினுட்ப பூங்கா சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் விஞ்ஞான மேற்கோள் அட்டவணை இடப்பட்ட சஞ்சிகைகளில் 19 ஆராய்ச்சி ஆக்கங்களும், சர்வதேச சஞ்சிகைகளில் 11 ஆராய்ச்சி ஆக்கங்களும் உள்நாட்டு மத்தியஸ்த சஞ்சிகைகளில் 03 ஆராய்ச்சி ஆக்கங்களும் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்கங்களில் 25 ஆராய்ச்சி ஆக்கங்களும், 6 நூல் அத்தியாயங்களும், 3 கொள்கை ஆவணங்களும் 3 ஏனைய ஆக்கங்களும் வெளியிடப்பட்டன.

தெங்கு உற்பத்திகள் மற்றும் அவற்றின் பிரதியீட்டு பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணை ஆகியனவற்றின் விஷேட தீர்வைகள் தொடர்பிலான கொள்கை உருவாக்கத்திற்கான கொள்கை பரிந்துரைகள் கொள்கை வகுப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. தேங்காய் மற்றும் தென்னங்கன்று ஆகியனவற்றின் உற்பத்தி கிரயத்தினை மதிப்பிடுவதற்கான சூத்திரமொன்று தொடர்ந்தும் மேம்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னை ஆராய்ச்சி நிறுவன தோட்டங்களில்(மரபியல் வள நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்) மொத்தமாக 5.13 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது 2020 ஆம் ஆண்டின் விளைச்சலுடன் ஒப்பிடும் போது 31மூ அதிகரிப்பாக காணப்படுகிறது. அனைத்து தோட்டங்களினதும் காயொன்றிற்கான சராசரி விற்பனை கிரயம் ரூ. 55.69 ஆகவும் உற்பத்தி கிரயம் ரூ. 27.80 காணப்பட்டன.

தெங்கு தொடர்பில் அக்கறையுடையோருக்கான சேவையாக ஏசிரியா சிற்றுண்ணிக்கான ஊன்னுன்னி சிற்றுண்ணிகள், தென்னையின் கருந்தலை புழுக்கான ஒட்டுண்ணிகள் மற்றும் செவ்வண்டுக்காக தொகுக்கப்பட்ட பெரமோன் ஆகியன தயாரிக்கப்பட்டு தெங்குச் செய்கையாளர்களுக்காக விநியோகிக்கப்பட்டன. உரப் பரிந்துரைகள் மற்றும் தும்பு சார் ஏற்றுமதி உற்பத்தி பொருட்களுக்கான பகுப்பாய்வு சேவைகள் வழங்கப்பட்டன.

2021 காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊழியர்களினால் வழங்கப்பட்ட அர்ப்பணிப்பான சேவைகள், ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு ஆகியவை பெரிதும் பாராட்டப்பட வேண்டியவையாகும். இந்த ஆண்டு முழுவதும் எமக்கான வழிகாட்டல்களையும் தொடர்ஆதரவினையும் வழங்கியமைக்காக கௌரவ அமைச்சர், இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் உத்தியோகத்தர்கள், தென்னை ஆராய்ச்சி சபையின் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியோருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் அனைத்து வெற்றிக்கும் எனது வாழ்த்துக்களை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கலாநிதி. சனாதனி ரணசிங்க

பணிப்பாளர், தென்னை ஆராய்ச்சி நிறுவனம்

ஆய்வுப் பரிந்துரைகள்

புதிய சேதன உரத்தொகுப்பு

மண் மற்றும் தாவர போஷணைப் பிரிவு

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்கனவே அளிக்கப்பட்ட உரங்களின் பரிந்துரைகளுக்கு (சேதன உரம் மட்டும், அசேதன உரம் மட்டும், சேதன மற்றும் அசேதன ஆகியனவற்றின் சேர்க்கை) மேலதிகமாகவும் அரசினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சேதன உர பாவனை தொடர்பான கொள்கையின் கீழ் பல்வேறுபட்ட சேதன பதார்த்தங்களை உள்ளடக்கிய சேதன உரத் தொகுப்பொன்று தென்னை செய்கையாளர்களின் கேள்வியினை பூர்த்தி செய்வதினை நோக்காக கொண்டு புதிதாக வெளியிடப்பட்டது.

உயிர்க்கரி பயன்படுத்துவது தொடர்பிலான இடைக்காலப் பரிந்துரை

பயிராக்கவியல் பிரிவு

மண்ணின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் அதன் மூலம் தென்னந்தோட்டங்களின் உற்பத்தியினை விருத்தியாக்குவதற்கும் உயிர்க்கரி பயன்படுத்தப்படுவது இடைக்காலப் பரிந்துரையாக அளிக்கப்படுகிறது.

செயல்திட்ட முன்மொழிவுகள்

உள்நாட்டு சந்தைப்படுத்தல் மற்றும் வியாபாரத்தினை எளிதாக்குவதற்கான செயல்திட்ட முன்மொழிவு

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

விளைச்சல் எதிர்வு கூறலின் படி 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட தேசிய தேங்காய் உற்பத்தி 3,300 மில்லியன்களாக காணப்பட்டதுடன், இது கடந்த காலங்களில் எதிர்பார்க்கப்பட்ட அதியுயர் தேங்காய் உற்பத்தியாக காணப்படுகிறது. நாட்டில் கொவிட்-19 நோய்ப்பரவல் நிலைமை காணப்பட்ட போதிலும் தெங்கு சார் உற்பத்திப் பொருள் பதனீட்டு தொழிற்சாலைகள் ஏற்றுமதி மற்றும் உள்ளூர் சந்தைக்காக கணிசமான அளவிலான உற்பத்திகளை உருவாக்கியதுடன் சிறந்த முறையில் இயக்கப்பட்டன. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் பாரியளவிலான விளைச்சலானது தெங்கு கைத்தொழில் துறையினால் உள்வாங்ககூடியதாக இருந்தது. ஆனால் கொவிட் 19 நோய்ப் பரவல் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட துறைமுக கையாளுகை கட்டண அதிகரிப்பு, கப்பல் போக்குவரத்து வழிகள் காணப்படாமை, பொதி செய்யப்பட்ட பதார்த்தங்களின் ஏற்றுமதி மற்றும் வெற்றுக் கொள்கலன்களின் ஏற்றுமதி ஆகியன வரையறுக்கப்பட்டமை போன்றவை காரணமாக தெங்கு பொருட்களின் ஏற்றுமதி தொடர்பில் பல பிரச்சினைகள் காணப்பட்டன.

தெங்கு கைத்தொழில் துறை சாதகமான நிலையில் இயக்கப்பட்ட போதிலும் நாட்டின் மொத்த எண்ணை தேவைப்பாட்டிற்கான உற்பத்தியினை மேற்கொள்ள தேசிய அளவிலான தேங்காய் உற்பத்தி போதுமானதாக இல்லை.

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி தேசியளவிலான சமையல் எண்ணைக்கான தேவைப்பாடு மற்றும் கைத்தொழில் துறை கேள்வி ஆகியன அண்ணளவாக 180,000 மெற்றிக் தொன் முதல் 210,000 மெற்றிக் தொன் ஆக காணப்படுகிறது. வருடாந்த உற்பத்தி புள்ளிவிபரவியலின் பிரகாரம், உள்நாட்டு தேங்காய் எண்ணை உற்பத்தி 35,000 தொடக்கம் 45,000 மெற்றிக் தொன்க்கு இடைப்பட்டதாகவும் பாம் எண்ணை உற்பத்தி 15,000 மெற்றிக் தொன் முதல் 20,000 மெற்றிக் தொன்க்கு இடைப்பட்டதாகவும் காணப்படுகிறது. ஆகவே நாட்டின் எஞ்சிய எண்ணை அளவினை சமப்படுத்த தேங்காய் எண்ணை, பாம் எண்ணை, சூரிய காந்தி எண்ணை மற்றும் ஏனைய சமையல் எண்ணை ஆகியன இறக்குமதி செய்யும் நடைமுறை காணப்பட்டது. ஆனால் அரசு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதியிலிருந்து விஷேட பண்ட தீர்வை வரித் திருத்தத்தினை அமுல்படுத்தியுள்ளது. இந்த திருத்தத்தின் படி, சுத்திகரிக்கப்படாத பாம் எண்ணை மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் (எச். எஸ். குறியீடு 1511-10-00, 1511-90-00, 1511-90-20) மீதான விஷேட பண்ட தீர்வை வரிக்கு தடை விதிக்கப்பட்டதுடன் சுத்திகரிக்கப்பட்ட பாம் எண்ணை மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள்(எச். எஸ். குறியீடு 1511-90-00, 1511-90-10, 30, 90) என்பன அனுமதிப்பத்திர நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

நாட்டின் சமையல் எண்ணை இறக்குமதியினை வரையறுப்பதில் இந்த கட்டுப்பாடுகள் செல்வாக்குச் செலுத்தின. தேங்காய் எண்ணைக் கைத்தொழில் துறை மற்றும் ஏனைய பதனீட்டு கைத்தொழில் துறைகளின் இடையே தேங்காய்க்கான போட்டி கடுமையான அளவில் அதிகரித்ததன் விளைவாக தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணை ஆகியனவற்றின் விலைகள் அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக நம் நாட்டிற்கான பாம் எண்ணை இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் சர்வதேச சந்தையில் தேங்காய் எண்ணை -யின் விலை கடுமையாக அதிகரித்தது. ஆகவே இந்த நிலைமையினை சமாளிப்பதற்காகவும் பதனீட்டு கைத்தொழில் துறையின் பாதிப்பினை இழிவளவாக்குவதற்கும் தென்னை ஆராய்ச்சி

துறையின் பாதிப்பினை இழிவளவாக்குவதற்கும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் கீழ்வரும் செயல்திட்டப் பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டன.

பரிந்துரை 1

சமையல் எண்ணைகளின் கிலோகிராம் ஒன்றிக்கான விலையினை சுமார் ரூ. 500 முதல் ரூ. 550 இற்குள் கட்டுப்படுத்த தேங்காய் எண்ணெய் மற்றும் ஏனைய சமையல் எண்ணெய் ஆகியனவற்றின் கிலோகிராம் ஒன்றிற்கான இறக்குமதி வரிகள் முறையே ரூ. 50 மற்றும் ரூ. 100 ஆல் குறைக்கப்பட்டன. தேங்காய் எண்ணை விலைகள் தீவிரமாக அதிகரிக்கின்றமையால் வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தை இழிவளவாக்குவதற்கு ஏனைய சமையல் எண்ணைகளின் இறக்குமதியினை ஊக்குவிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

பரிந்துரை 2

சந்தையில் தேங்காய் விலையினை கட்டுப்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தேங்காய் ஏலங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தல்.

பரிந்துரை 3

பாரியளவில் அதிகரித்துள்ள தெங்கு சார் ஏற்றுமதியாளர்களுக்கான துறைமுக கையாளுகை கட்டணங்களுக்கு சலுகை வழங்குவதற்கான முன்மொழிவு.

பரிந்துரை 4

தென்னை பதனீட்டு கைத்தொழில் துறை உற்பத்திகளை கொண்ட தொங்கும் கொள்கலன்களின் ஏற்றுமதிக்கு வசதியளித்தல்.

பரிந்துரை 5

பொதி செய்யப்பட்ட பதார்த்தங்கள் மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரிகளை தளர்த்தல்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மேற்கோள்கள்



வறட்சிக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தென்னை பரம்பரை வகையினை உடற்கூற்றியல் மற்றும் பரம்பரை அலகு வெளிப்பாடு ஆய்வினை பயன்படுத்தி அடையாளம் காணல் மற்றும் பண்புருவாக்கல்

மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவு

தென்னையின் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் உடற்கூற்றியல் தொழிற்பாடுகளில் வறட்சி என்கின்ற பிரதானமான அழுத்தக் காரணி எதிர்மறையாக தாக்கம் செலுத்துவதுடன் குறைந்த விளைச்சலினையும் விளைவாகத் தருகிறது. மேலும் அயன மண்டல பிரதேசங்களில் காலநிலை மாற்றத்தினால் பொதுவாக ஏற்படுகின்ற வறட்சி நிலை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வறட்சிக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய இனங்களின் இனவிருத்தி முன்னுரிமை அளிக்கப்பட்ட ஆராய்ச்சிப் பகுதியொன்றாக உள்ளது. வறட்சியின் அழுத்தத்தை தாங்கக்கூடியதான பல்வேறு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டதுடன் ஆபத்தான வறட்சிக்கு தாக்குப்பிடிக்கக்கூடியதான ஒரு தொகுதி தாய்த் தாவரங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இந்த தாய்த் தாவர தொகுதி “சிறப்பு அம்பகலே” என பெயரிடப்பட்டது.

ஆனால் வறட்சியினை தாங்கக்கூடிய தாவரத்தின் அடிப்படை மரபணுவானது உடற்கூற்று-உயிர் இரசாயன மற்றும் பரம்பரையலகு வெளிப்பாட்டு ஆய்வுகளின் மூலம் அடையாளங் காணப்படல் அவசியமாகும். ஆகவே 2021 ஆம் ஆண்டில் உடற்கூற்றியல் மற்றும் பரம்பரையலகு வெளிப்பாட்டு ஆய்வுகளின் ஊடாக இலங்கையின் தென்னை மரங்களின் சிறப்பியல்புகளை அறிவதற்காக புதிதாக ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டது. இது இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தென்னை இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பரம்பரையலகு வெளிப்பாட்டு ஆய்வினை பயன்படுத்தி மேற்கொள்ளபட்ட முதல் ஆய்வாக குறிப்பிடப்படுகிறது. இதற்கு மேலதிகமாக சிறப்பு அம்பகலேயின் ஆபத்தான வறட்சியினை தாங்கக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஆய்வானது பயன்படுத்தப்படவுள்ளது.

தென்னை சிற்றுண்ணிகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தென்னை இரகங்களின் உருவாக்கம்

மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவு

அசேரியா சிற்றுண்ணியினால் ஏற்படுகின்ற நோய்த் தாக்கம் காரணமாக இலங்கையின் இடை வெப்ப வலயம் மற்றும் உலர் வலயங்களிலுள்ள தெங்குத் தோட்டங்களினது விளைச்சலில்

வீழ்ச்சி காணப்படுகிறது. அசேரியா சிற்றுண்ணிகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய அல்லது அவற்றுக்கு எதிரான தென்னை இரகங்களின் இனவிருத்தி விளைச்சலில் ஏற்படுகின்ற வீழ்ச்சியினை குறைப்பதற்கான பேண்தகு தேர்வொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் புதிதாக 05 கலப்பின தென்னை இரகங்களான; இலங்கை நெட்டை × பிரேசிலியன் பச்சை குட்டை, கொன் தெம்பிலி நெட்டை × பிரேசிலியன் பச்சை குட்டை, பிரேசிலியன் பச்சை குட்டை × கொன் தெம்பிலி நெட்டை, சென்ராமன் நெட்டை × பிரேசிலியன் பச்சை குட்டை, இலங்கை மஞ்சள் குட்டை × கொன் தெம்பிலி நெட்டை ஆகிய மாறுபட்ட பெற்றோர்களை பயன்படுத்தி மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவினால் உற்பத்தியாக்கப்பட்டன. இந்த கலப்பினங்கள் கடந்த 12 வருடங்களாக கள மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் இல. நெட்டை × பிரேசி. பச்சை குட்டை (T x BGD) கலப்பினம் சிறியளவிலான சிற்றுண்ணித் தாக்க நிகழ்வுகளையும் அதிகளவான தேங்காய் விளைச்சலினையும் தொடர்ந்து காண்பித்துள்ளது. மிகச் சிறந்த காய் உற்பத்தியினை தருகின்ற கப்புவனவினை ஒத்ததாக அதிகளவான காய் விளைச்சலை இந்த கலப்பினம் தக்க வைத்து கொள்வதுடன் மிகக்குறைந்த அளவிலான சிற்றுண்ணித் தாக்க நிகழ்வுகள் பதிவாகியுள்ளது. ஆகவே நெட்டை × பிரேசிலியன் பச்சை குட்டை கலப்பினமானது தென்னை சிற்றுண்ணிகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய இனமாக எதிர்காலத்தில் பரிந்துரைக்கப்படுவதற்கான உயர் சாத்தியத்தினை கொண்டிருக்கிறது. விரிவான ஆதாரங்களை பெற்றுக் கொள்வதற்காக பல இடங்களிலும் இடம்பெறுகின்ற சோதனைகளின் தரவுப் பதிவுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளது. அதேவேளை இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் வெளிநாட்டு பெற்றோர் இரகமான பிரேஸிலியன் பச்சை குட்டை இனத்தின் இனவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டு வருகிறது.



உரு. 1. நெட்டை × பிரேசிலியன் பச்சை குட்டை தென்னை மரம்

அட்டவணை 1.

இரகம்	உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை
உள்நாட்டு மூலவுயிர்முதலுரு	
கொன்தெம்பிலி	28
போதிரி	35
ரன்தெம்பிலி	78
ரத்ரன் தெம்பிலி	43
கபிலக் குட்டை	168
சிவப்புக் குட்டை	42
வெளிநாட்டு மூலவுயிர்முதலுரு	
கமரூன் சிவப்பு குட்டை	194
மலேயன் சிவப்புக் குட்டை	27
பிரேஸிலியன் பச்சை குட்டை	25
ரெனெல் தீவு நெட்டை	22
அந்தமான் நெட்டை	19
கட்டிகன் பச்சை குட்டை	7

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவுயிர்முதலுருவின் தொகுப்பு மற்றும் பாதுகாப்பு, அவற்றினை இனவிருத்தி செயல்திட்டங்களில் பயன்படுத்தல்

மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவு

தென்னையின் பரம்பரையலகு வளங்கள் மரபியல் அழிவினால் உயர்ந்த அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. கைத்தொழில்மயமாக்கம், நகரமயமாக்கம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பணப் பயிர்களுக்காக விவசாய நிலங்களின் மாற்றுப் பயன்பாடு, தேசிய மீள் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தில் தற்போதுள்ள மரங்களின் மாற்றீடு


மற்றும் இயற்கை அனர்த்தங்களான புயல், வறட்சி, பீடைகள் மற்றும் நோய்கள் என்பன இதற்கான பிரதான காரணங்களாகும். ஆகவே நாட்டிலுள்ள தென்னையின் மூலமுதலுருகளை சேகரிக்கவும், வெளிப்புறத்தில் பாதுகாக்கவும், இயல்பாய்வு மேற்கொள்ளவும் 1980 ஆம் ஆண்டில் இருந்து மரபியல் மற்றும் தாவர இனவிருத்தி பிரிவினால் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படுகிறது.

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலமுதலுருக்கள் பாதுகாக்கப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டில் இனவிருத்தி செய்யப்பட்டன.

உடற்கல முளையப் பிறப்பினை அறிமுகப்படுத்தல் மற்றும் சூலகத்திலிருந்து பெறப்பட்ட மூடு படையிலிருந்து தாவர மீள் உருவாக்கம்

இழைய வளர்ப்புப் பிரிவு

குறைந்த வீதத்திலான குளோன் அரும்பு பெருக்கத்தின் சாத்தியத்தினை மதிப்பிடுவதற்காக மூடுபடை பெருக்கம் மற்றும் அரும்பு விருத்தி ஆகிய நிலைகளில் உள்ள வளர்ப்பு ஊடகங்கள் உயர்ந்த அளவில் தாவர வளர்ச்சிச் சீராக்கிகள் (300µM



உரு. 2. குலையுடனான சூலக வளர்ப்பு செய்யப்பட்ட குளோனிங் தென்னைகள்

2,4 - இரு குளோரோபீனொக்சி அசெற்றிக்கமிலம் மற்றும் 300µM BAP (6 - பென்சைல் அமைனோபியூரைன்)) கொண்டு பரிகரிக்கப்பட்டன. குறித்த காலப்பகுதியில் 18 தென்னைப் பூந்துணரிலிருந்து உருவாக்கப்பட்ட வளர்ப்பு ஊடகங்களில் அண்ணளவாக 700 அரும்புகள் மீளுருவாக்கப்பட்டிருந்தன. கொரோனா முடக்கம் காரணமாக வெவ்வேறு நிலைகளில் காணப்பட்ட மூடு படைகளில் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்ட சிதைவின் காரணமாக சோதனைகளின் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நிகழ்த்தப்படவில்லை. இந்த வருடகாலப் பகுதியில் 85 சூலக பிரித்தெடுப்பு குளோனிங் கன்றுகள் புறச் சூழலுக்கு பழக்கப்படுத்தப்பட்டதுடன் 20 கன்றுகள்

களத்தில் நடப்பட்டன. சீ. ஆர். ஐ. சீ 65 மற்றும் சீ. ஆர். ஐ. எஸ். எல் 98 ஆகியனவற்றின் சூலக வளர்ப்பு குளோனிங் தென்னங்கன்றுகள் 2016 முதல் 2017 வரை பண்டிரிப்புவ தோட்டம் மற்றும் கட்டான ஆகிய இடங்களில் நடப்பட்டு அவை இந்த ஆண்டு நன்கு காய்த்துக் காணப்பட்டன.

தென்னையின் இலிங்கமில் முறையிலான இனப்பெருக்கத்திற்காக புதிய உயிருள்ள இழையப் பகுதியினை (முன்னோடி) இனங்காணல்

இழைய வளர்ப்புப் பிரிவு

தென்னையின் நுண் இனப்பெருக்கத்திற்கான புதிய முன்னோடிகளான குருத்தோலை இழையங்களின் ஆற்றலானது வெவ்வேறுபட்ட ஊடகங்களின் சேர்க்கைகளில் வளர்க்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. சூலக மூடுபடையில் இருந்து பெறப்பட்ட குளோனிங் தாவரங்களுக்காக நெறிமுறைகளை உருவாக்க குழாய்களில் முளைய வளர்ப்பு செய்யப்பட்ட ஓலையின் பகுதிகள் இந்த பரிசோதனையில் பயன்படுத்தப்பட்டன. குருத்தோலைகள் வெவ்வேறுபட்ட ஊடக சேர்க்கைகளில் வளர்க்கப்பட்டன. முளையங்கள் முளைத்ததன் பின்னர் சில முன்னோடிகள், முளையங்கள் மற்றும் அரும்புகளை உருவாக்கின. உருவாக்கப்பட்ட அரும்புகள் மேலதிக வளர்ச்சிக்காக பொருத்தமான ஊடகங்களில் வைத்துப் பேணப்பட்டன.



நன்கு வளர்ந்த தென்னைப் பெருந்தோட்டங்களுக்கு உயிர்கரியினைப் பயன்படுத்துவதன் மூலம் பேண்தகு ஈரப்பதன் காப்பு முறையை உருவாக்கல்

பயிராக்கவியல் பிரிவு




உரு. 1. ஆய்வுத் தளம்


உயிர்க்கரியினை பயன்படுத்தி இலங்கையின் உலர் மற்றும் இடை வெப்ப வலயங்களிலுள்ள தென்னைப் பெருந்தோட்டங்களில் பேண்தகு மண் ஈரப்பதன் காப்பு முறை ஒன்றினை உருவாக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். 2015 ஆம் ஆண்டில் உலர் வலயத்தின் சார்பாக புத்தளம் மாவட்டத்தின் ரஸ்நாயகபுர தோட்டத்தில் உள்ள 30 ஆண்டு வயதினை (உரு. 1) கொண்ட பெருந்தோட்டத்தில் இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. கிளிரிசீடியா தடிகளை பயன்படுத்தி மீளமைக்கப்பட்ட சூளையினுள் குறைந்த ஒட்சிசன் வழங்கலில் கீழ் உயிர்க்கரி தயாரிக்கப்பட்டது. பின்வரும் பரிகரிப்புக்கள் மூன்று பிரதிகளுடன் ஆர். சீ. பீ. டீ மாதிரியில் மேற்கொள்ளப்பட்டன.

1. 1/3 பங்கு ஆழத்தில் 15 கிலோகிராம் உயிர்க்கரி புதைக்கப்பட்ட வட்ட வடிவ குழி
2. 1/3 பங்கு ஆழத்தில் 10கிலோகிராம் உயிர்க்கரி புதைக்கப்பட்ட வட்டவடிவ குழி
3. 1/3 பங்கு ஆழத்தில் 5 கிலோகிராம் உயிர்க்கரி புதைக்கப்பட்ட வட்ட வடிவ குழி
4. 1/3 பங்கு ஆழத்தில் 200 - 250 பொச்சு மட்டை புதைக்கப்பட்ட வட்ட வடிவ குழி
5. ஆளுகை நிபந்தனை கீழான குழி (தென்னம் மட்டை கொண்டு மூடு படை இடப்பட்டது.)

2016 தொடக்கம் 2021 வரையிலான தொடர்ச்சியான காலப்பகுதியில் பெறப்பட்ட சராசரி காய் விளைச்சலின் தரவுகள் உரு. 2 இல் காட்டப்பட்டுள்ளது. அதியுயர் விளைச்சலானது (மரமொன்றிலிருந்து வருடாந்தம் 69 காய்கள்) 15 கிலோகிராம் உயிர்க்கரி பரிகரிப்பு பெறப்பட்ட தென்னைகளில் அவதானிக்கப்பட்டதுடன் இது ஒப்பீட்டளவில் பொச்சு மட்டை பரிகரிப்பு செய்யப்பட்ட மற்றும் ஆளுகை நிபந்தனை மரங்களினை விட குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும். (மரமொன்றிலிருந்து வருடாந்தம் பெறப்பட்ட காய்கள் முறையே 57 மற்றும் 53 ஆகும்.) பொச்சு மட்டை புதைக்கப்பட்டு பரிகரிப்பு செய்யப்பட்ட மரங்களை விட 15 கிலோகிராம் உயிர்க்கரி புதைக்கப்பட்ட மரங்களின் விளைச்சல் 21% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. பரிகரிப்புகள் இடையே மண் ஈரப்பதனில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்படவில்லை (உரு. 3).



உரு. 2. உயிர்க்கரி, பொச்சு மட்டை மற்றும் கட்டுப்பாட்டு பரிகரிப்புகளில் 2016-2021 வரை பெறப்பட்ட சராசரி காய் விளைச்சலின் தரவுகள். ஒரே எழுத்துக்களை பின்பற்றப்பட்ட பெறுமானங்களில் $p<0.05$ இல் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை.



உரு. 3. வெவ்வேறு பரிகரிப்பு வழங்கப்பட்ட குழிகளின் மண் ஈரப்பதன் சதவீதம்

இள வயது தென்னைப் பெருந்தோட்டங்களுக்கு உயிர்க்கரியை பயன்படுத்துவதன் மூலம் பேண்தகு ஈரப்பதன் காப்பு முறையை உருவாக்கல்

பயிராக்கவியல் பிரிவு

உயிர்க்கரியினை பயன்படுத்தி உலர் வலய மற்றும் இடைவெப்ப வலயத்தின் தென்னங்கன்றுகளுக்கான பேண்தகு ஈரப்பதன் காப்பு முறையொன்றினை உருவாக்கவும் தென்னங்கன்று நடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மிகச் சிறந்த உயர்க்கரி பயன்பாட்டு முறையினை மதிப்பிடுவதற்காகவும் இந்த ஆய்வு செய்யப்பட்டது. தென்னங்கன்று நடப்படும் போது ஈரப்பதனை நிலைத்திருக்கச் செய்வதற்காகவும் ஈரப்பதன் அழுத்தத்தின் காரணமாக கன்றுகள் மடிவதை குறைப்பதற்காக இடப்படுகின்ற பொச்சு மட்டை படைகளுக்கு மாற்றீட்டுப் பொருளாக கிளிசீடியா உயிர்க்கரி (2% w/w) தென்னங்கன்று நடப்படும் போது பயன்படுத்தப்படுகிறது.

பின்வரும் பரிகரிப்புக்கள் மூன்று பிரதிகளுடன் ஆர். சீ. பீ. டீ மாதிரியில் மேற்கொள்ளப்பட்டன.

T_1 - குழியின் அடிப்பகுதியில் உயிர்க்கரி அல்லது பொச்சு மட்டை இடப்படவில்லை

T_2 - குழியின் அடிப்பகுதியில் பொச்சு மட்டைகள் (30-35) இடப்பட்டன. (தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரை)

T_3 - குழியின் அடிப்பகுதியில் 2% கிளிசீரியா மர உயிர்க்கரி படையொன்று இடப்பட்டது.

T_4 - குழியின் அடிப்பகுதியில் 1% கிளிசீரியா மர உயிர்க்கரி படையொன்றும் 1% கிளிசீரியா மர உயிர்க்கரி குழி மண்ணுடன் சேர்க்கப்பட்டது.


T_5 - 2% கிளிசீரியா மர உயிர்க்கரி குழி மண் முழுவதும் சேர்க்கப்பட்டது.

தென்னங்கன்று நடப்பட்டு 1 வருடத்தின் பின்னர் பரிகரிப்பு முறைகளுக்கிடையே மண் ஈரப்பதனில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் காணப்படவில்லை (அட்டவணை 1). அதியுயர் மண் ஈரப்பதனானது குழி மண் முழுவதும் 2% உயிர்க்கரி சேர்க்கப்பட்ட T_5 (5.86%) அவதானிக்கப்பட்டதுடன் இது 4.67% ஈரப்பதன் கொண்ட பொச்சு மட்டை கொண்டு பரிகரிக்கப்பட்ட குழியிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டு காணப்பட்டது. ஈரத் துணிக்கை நிலைப்பாட்டுத் தரவுகள் ஒரே மாதிரியான போக்கினையே காட்டின. ஆனால் அவை குறிப்பிடத்தகளவு வேறுபட்டு காணப்படவில்லை. கள நிபந்தனையின் கீழ் அதியுயர் ஈரத் துணிக்கை நிலைப்பாட்டு சதவீதமானது T_3 மற்றும் T_4 பரிகரிப்புகளில் முறையே 21.6 % மற்றும் 21.4 % ஆக அவதானிக்கப்பட்டது. பொச்சு மட்டை கொண்டு பரிகரிக்கப்பட்ட குழியுடன் ஒப்பிடும் போது தரவுகள் அதிகளவில் வேறுபட்டுக் காணப்பட்டன(18.6%). ஆனால் தீர்க்கமான முடிவிற்கு வரும் வரை சோதனை 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.



உரு. 4. களத்தில் உயிர்க்கரியின் பிரயோகம்





உரு. 5. தென்னங்கன்று நடுகை



உரு. 6. வளர்ச்சிப் பரமானங்களை அளவிடுதல்

அட்டவணை 1. கன்று நாட்டப்பட்டு ஒரு வருடத்தின் பின் பரிகரிப்புகளின் மண் ஈரப்பதன் உள்ளடக்கம் மற்றும் ஈரத் துணிக்கை நிலைப்பாடு

பரிகரிப்பு	மண் ஈரப்பதன் %	ஈரத் துணிக்கை நிலைப்பாடு %
குழியின் அடியில் உயிர்க்கரி அல்லது பொச்சு மட்டை எதுவும் இடப்படவில்லை.	5.03 [ab]	19.63 [ab]
குழியின் அடியில் பொச்சு மட்டைகள் (30-35) இடப்பட்டன. (தெ. ஆ. நி பரிந்துரை)	4.67 [b]	18.63 [b]
குழியின் அடியில் 2% கிளிரீசிடியா மரத்தின் உயிர்க்கரி ஒரு படையாக இடப்பட்டது.	5.69 [a]	21.60 [a]
குழியின் அடியில் 1% கிளிரீசிடியா மரத்தின் உயிர்க்கரி ஒரு படையாக இடப்பட்டு 1% கிளிரீசிடியா மரத்தின் உயிர்க்கரி குழியின் மண்ணுடன் கலக்கப்பட்டது.	5.40 [ab]	21.42 [a]
2% கிளிரீசிடியா மரத்தின் உயிர்க்கரி குழி மண்ணுடன் முழுமையாகக் கலக்கப்பட்டது.	5.86 [a]	20.06 [ab]
மாறல் குணகம்	0.31	0.27
P- பெறுமானம்	0.142	0.103

ஒரே எழுத்துக்களை தம்மிடையே கொண்டிராதவை $p < 0.1$ இல் வேறுபட்டு காணப்படுகிறது.

மண்ணின் ஈரப்பதன் காத்தல் மற்றும் தென்னங்கன்று வளர்ச்சி ஆகியனவற்றுக்கான புதிய பத்திரகலவையிடல் பதார்த்தத்தினை அடையாளம் காணல் மற்றும் மதிப்பிடல்.

பயிராக்கவியல் பிரிவு

பொதுவாக தென்னையானது மழை பெறுகின்ற நிபந்தனைகளில் பயிரிடப்படுகிறது. இதன் வளரும் தன்மை மற்றும் உற்பத்தி ஆகியனவற்றினை பேணுவதற்கு முறையான நீர் வழங்கல் தேவைப்படுகிறது. எனவே வறண்ட காலப் பகுதியில் ஏற்படுகின்ற மண்ணின் ஈரப்பதன் அழுத்தமானது இதன் உயிர் வாழல் மற்றும் காய் உற்பத்தி ஆகியனவற்றில் இன்றியமையாத காரணியாக காணப்படுகிறது. தென்னை மற்றும் அதன் கன்றுகளின் உர வட்டத்தினை வேறுபட்ட தாவர பதார்த்தங்களால் பத்திர கலவையிடல் மற்றும் பொச்சு மட்டைகளை புதைத்தல் ஆகியன தெங்கு தோட்டங்களில் பொதுவான நடைமுறையிலுள்ள மண் ஈரப்பதன் காப்பு முறைகளாகும்.

பத்திரகலவையிடலுக்கான பொருட்கள் பல விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் மூலப்பொருளாக இருப்பதனால் இவற்றுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுவதனால் பொருத்தமான பத்திரக்கலவையிடல் பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே மண்ணின் ஈரப்பதன் காத்தல் மற்றும் தென்னங்கன்று வளர்ச்சியில் நடைமுறையிலுள்ள பத்திரக்கலவையிடல் பொருட்களுடன் வர்த்தக ரீதியாக கிடைக்கப் பெறுகின்ற பொலித்தீன் பத்திரக்கலவையின் (பத்திர கலவையிடல் பாய் மற்றும் பத்திர கலவையிடல் படலம்) விளைவினை ஒப்பிட்டு மதிப்பீடு செய்வதற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டது.

வேறுபட்ட பத்திரகலவையிடல் (உரு. 7) பதார்த்தங்களின் கீழுள்ள மண்ணின் ஈரப்பதன் அளவுகள் அளவிடப்பட்டன. பத்திரக்கலவையின் தாக்கத்தின் விளைவாக மண்ணின் மேல் படையின் (0-15 செ.மீற்றர்) ஈரப்பதன் கணிசமான அளவு வேறுபட்டு காணப்பட்டது. மண் ஈரப்பதன் சதவீதத்தின் அதியுயர் அளவினை பத்திரக்கலவையாக பயன்படுத்தப்பட்ட தென்னோலை மட்டையிலும் (7.22%) மிகக்குறைந்த அளவினை பத்திரக்கலவை படலங்களிலும் அவதானிக்கப்பட்டது. பத்திரக்கலவை பாயினால் மேல் படை மண்ணின் ஈரப்பதனில் ஏற்பட்ட தாக்கம் தென்னோலை மட்டை மற்றும் பொச்சு மட்டை ஆகியவற்றினால் ஏற்பட்ட



உரு. 7. இளம் கன்றுகளுக்கு பத்திரக்கலவையாக இடப்பட்ட பத்திரக்கலவை பாய் மற்றும் பத்திரக்கலவை படலம்

அட்டவணை 2: ஒரு வருட பரிகரிப்பின் பின் வெவ்வேறுபட்ட ஆழங்களில் வெவ்வேறான பத்திரக்கலவையிடல் பதார்த்தங்களின் கீழ் ஈரப்பதன் அளவு மற்றும் நுண்ணங்கி தொழிற்பாடு

பத்திரக் கலவையிடல் பதார்த்தம்	ஈரப்பதன் % (உலர் அடிப்படையில்)			நுண்ணங்கி தொழிற்பாடு (µg-CO2/g-soil/day)
	0 - 15 செ.மீ	15 - 30 செ.மீ	30 - 45 செ.மீ	
தென்னோலை மட்டை	7.22[a]	8.07	7.55	49.63
பொச்சு மட்டை	5.96[ab]	7.32	7.85	47.6
பத்திரகலவையிடல் பாய்	6.35[ab]	7.38	8.35	47.44
பத்திரகலவையிடல் படலம்	5.57[b]	7.25	7.82	46.6
நியம விலகல்	1.54	1.04	1.91	18.58
மாறல் குணகம்	24.49	13.85	24.15	38.87
P- பெறுமானம்	0.01	0.06	0.86	0.973

ஒரே எழுத்துக்களை தம்மிடையே கொண்டிராதவை $p< 0.05$ இல் வேறுபட்டு காணப்படுகிறது.

தாக்கத்தினை ஒத்திருந்தது. அனைத்து பத்திரக்கலவை பொருட்களினால் மண் ஈரப்பதன் அளவில் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் 15-30 செ.மீற்றர் மற்றும் 30-45 செ.மீற்றர் ஆழங்களில் ஒரே மாதிரியான காணப்பட்டது.

பல்வேறுபட்ட பத்திரக்கலவையிடல் பொருட்களின் மேல் படை மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு நுண்ணங்கிச் சுவாசப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நுண்ணங்கி தொழிற்பாட்டில் பத்திரக்கலவை பதார்த்தங்களின் தாக்கம் ஒரே அளவில் காணப்பட்டதாக முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

கினிப்புல்லின் (*Panicum maximum*) மாற்றுப் பயன்பாட்டினை ஆராய்தல்

பயிராக்கவியல் பிரிவு

1820 ஆம் ஆண்டில் இலங்கையில் தீவனமொன்றான அறிமுகப்படுத்தப்பட்ட *Panicum maximum* கடந்த சில தசாப்தங்களில் நாட்டின் சூழல் தொகுதியொன்றாக மாறியுள்ளது. தற்போது இது மிக விரைவாக பரம்பலடையக்கூடிய சிக்கலான களையாக காணப்படுகிறது. பல தெங்குப் பெருந்தோட்டங்கள் இந்த புல்லினால் பரவிக் காணப்படுவதுடன் பெருந்தோட்டத்தின் நாளாந்த நடைமுறைகளை பாதிக்கிறது. இதனால் உற்பத்தி கிரயமானது அதிகரிக்கிறது.

தண்டுக் கிழங்கினை கொண்ட இந்த களையினை கைகளால் மற்றும் பொறிமுறையான களை கட்டுப்பாட்டு முறைகளால் கட்டுப்படுத்துவது விளைதிறனாக அமையாது. களைகொல்லிகள்

தடை செய்யப்பட்டதுடன் இந்த களையினை கட்டுப்படுத்தலானது மிகவும் பாடுபட்டு உழைக்கின்ற விடயமாக காணப்படுகிறது. இருப்பினும் ஏனைய பெரும்பாலான நாடுகளில் இது பெறுமதியான தீவனமாகவும் சேதன மண் திருத்திகளின் தயாரிப்பில் மூலப்பொருளாகவும் கருதப்படுகிறது. வேறுபட்ட அறுவடை இடைவெளிகளில் போஷணை கூறுகளை மதிப்பிடுவதன் மூலம் கூட்டுரம், மண்புழு உரம் மற்றும் விலங்கு தீவனம் ஆகியவற்றின் தயாரிப்பில் கினிப்புல்லினை மூலப்பொருளாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியத்தினை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

கினிப்புல்லின் உலர் பதார்த்த அளவானது காலத்துடன் அதிகரிப்பதுடன் உயர் அளவிலான உலர் பதார்த்தத்தினை (1.89 மெற்றிக் தொன் / ஹெக்டயர்) மீள் வளர்ச்சியின் பின்னரான 12 வார அறுவடையின் பின் காட்டுகிறது. அதே போல் கரட்டு நார்ப்பொருள் சதவீதமும் (CF%) காலத்துடன் அதிகரிக்கிறது. உலர் பதார்த்தத்தின் மிகக்குறைந்த அளவானது (36.39%) மீள் வளர்ச்சியின் பின் 4 வாரங்களின் பின்னரும் அதிகூடிய அளவானது (39.63%) 12 வாரங்களிலும் பதிவாகியுள்ளது.

பண்படுத்தப்படாத புரதம், நைதரசன், பொசுபரஸ் ஆகியனவற்றின் சதவீதங்கள் காலத்துடன் வீழ்ச்சியடைந்ததுடன் 3 அளவீடுகளினதும் உயர் பெறுமானமானது மீள் வளர்ச்சியின் பின் 4 வாரங்களில் பதிவாகியுள்ளது (அட்டவணை 3).

அட்டவணை 3: வெவ்வேறுபட்ட அறுவடை இடைவெளிகளில் கினிப்புல்லின் உலர் பதார்த்த அளவு, கரட்டுப் புரதம், கரட்டு நார்ப்பொருள், நைதரசன் மற்றும் பொஸ்பரசு ஆகியவற்றின் சதவீதங்கள்

அறுவடை இடைவெளி (மீள் வளர்ச்சியின் பின் வரும் வாரங்களில்)	உலர் பதார்த்தம் (மெற்றிக் தொன் / ஹெக்டெயர்)	கரட்டுப் புரதம் %	கரட்டு நார்ப்பொருள் %	நைதரசன் %	பொஸ்பரசு %
4	0.84^{b}	9.32^{a}	36.39^{c}	1.49^{a}	0.29^{a}
6	1.01^{b}	7.28^{b}	38.40^{b}	1.16^{b}	0.27^{a}
8	1.52^{ab}	6.82^{bc}	38.62^{ab}	1.09^{bc}	0.25^{abc}
10	1.80^{a}	6.22^{c}	38.38^{b}	0.99^{c}	0.21^{bc}
12	1.89^{a}	4.53^{d}	39.63^{a}	0.71^{d}	0.19^{c}
P - பெறுமதி	0	0	0	0	0
நியம விலகல்	0.74	1.86	2.08	0.31	0.1
மாறற்குணகம்	52.53	27.86	5.44	28.92	43.18

ஒரே எழுத்துக்களை தம்மிடையே கொண்டிராதவை $p < 0.05$ இல் வேறுபட்டு காணப்படுகிறது.

தென்னைப் பெருந்தோட்டங்களுக்கான நகரத் திண்மக் கழிவின் பிரயோகம்

மண் மற்றும் தாவர போஷணைப் பிரிவு

பார உலோகங்கள், நோய்க்கிருமிகள் கொண்ட கூட்டெருவின் மாசுக்கள் மனித ஆரோக்கியத்திற்கு ஆபத்தினை விளைவிக்கிறது. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைகள் எதுவும் இன்றியும் நகர திண்ம கழிவு கூட்டுரமானது தென்னை செய்கையாளர்களினால் பயன்படுத்தப்படுவது தற்கால நடைமுறையிலுள்ளது. மாநகரத் திண்மக் கூட்டுரத்திலுள்ள மா போஷணைகள், நுண் போஷணைகள், நோய்க்கிருமிகள் மற்றும் பார உலோகங்கள் ஆகியனவற்றை அடையாளம் காண்பதற்காக இலங்கையின் 30 மாநகர சபைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் மா போஷணை, நுண் போஷணை மற்றும் நோய்க்கிருமிகள் ஆகியவற்றின் பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டன. மா போஷணைகள் மிகக்குறைந்த அளவிலும் காபன் சேர்க்கை உயர்வாகவும் நுண் போஷணைகள் ஏற்றுக் கொள்ளத்தக்க வீச்சினுள் இருப்பதாக முடிவுகள் வெளியிட்டன. 2021 ஆம் ஆண்டில் பார உலோகங்கள் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மாதிரிகளில் காணப்பட்ட பார உலோகத்தின் அளவு ஏற்றுக் கொள்ளத்தக்க அளவில் உள்ளதாக இலங்கை தர நிர்ணய நிறுவன நியமங்கள் குறிப்பிடுகின்றன (அட்டவணை 4). இரண்டு மாதிரிகளில் மாத்திரம் பாதரசம் கண்டறியக்கத்தக்க அளவில் அவதானிக்கப்பட்டது.

அட்டவணை 4. மாநகர கூட்டுர மாதிரிகளில் அவதானிக்கப்பட்ட பார உலோகங்கள்

பார உலோகம்	சராசரி (வீச்சு) (mg/kg)	SLSI தர நியமம் (mg/kg)
கட்மியம் (Cd)	0.41 (0.1-1.3)	உயர்வு 3
குரோமியம் (Cr)	20.7 (7.4-63.6)	உயர்வு 150
ஈயம் (Pb)	9.66 (2.9-21.2)	உயர்வு 150
நிக்கல் (Ni)	6.5 (1.28-11.7)	உயர்வு 50
ஆசனிக் (As)	2.4 (0.5-4.2)	உயர்வு 5
பாதரசம் (Hg)	**	உயர்வு 2

SLSI - இலங்கை கட்டளைகள் நிறுவனம்

** இரண்டு மாதிரிகளில் மாத்திரம் பாதரசம் கண்டறியக்கத்தக்க அளவில் அவதானிக்கப்பட்டது.

அனைத்து மாதிரிகளின் கோலி.ஃபோம், குடலில் வாழும் பற்றீரியா (fecal coliform), சல்மோனெல்லா, உயிருள்ள நெமற்றோடு மற்றும் வாழ்தகவுடைய நெமற்றோடு முட்டை ஆகியன சோதிக்கப்பட்டன. குடலில் வாழும் பற்றீரியா 16 மாதிரிகளில் கண்டறியக்கூடிய அளவுகளில் காணப்பட்டது. ஆனால் சல்மோனெல்லா எந்த மாதிரிகளிலும் அவதானிக்கப்படவில்லை. சில மாதிரிகளில் கண்டறியக்கூடிய அளவில் நெமற்றோடு (5 மாதிரிகள்) மற்றும் வாழ்தகவுடைய நெமற்றோடு முட்டைகள் (10 மாதிரிகள்) ஆகியன அவதானிக்கப்பட்டன. குடலில் வாழும் பற்றீரியாவின் இருப்பு கூட்டுரமானது மலத்தினால் மாசுபட்டிருப்பதை காட்டுகிறது. எவ்வாறாயினும் விஷேடமாக நுண் பிளாஸ்டிக் மற்றும் காபன் பகுதிகள் தொடர்பான ஆய்வு முடியும் வரை தென்னைப் பெருந்தோட்டங்களுக்கு மாநகர திண்மக்கழிவுக் கூட்டுரத்தினை பயன்படுத்துவதற்கான எதுவித பரிந்துரைகளையும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைக்கவில்லை.

அதிகளவு நிறப்பொருள் கொண்ட நிலத்தில் வளர்கின்ற தென்னம் வேர்களில் ஆர்பஸ்கியூலர் மைகோரைசல் மதிப்பிடுவதற்கான நிறமூட்டல் மற்றும் சுத்தப்படுத்தல் ஆகியனவற்றை வெற்றிகரமாக செய்வதற்கான நெறிமுறையினை தேர்வு செய்தல்


மண் மற்றும் தாவர போஷணைப் பிரிவு

தென்னையுடனான ஆர்பஸ்குளார் மைக்கோரைசா பங்கசின் ஒன்றிய வாழ்வினை பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்ற போது அதிகளவிலான நிறம் கொண்ட நிலத்தில் வளர்கின்ற தென்னை வேர்களை கையாளுவது மிகப்பெரியளவிலான சவாலொன்றாக காணப்படுகிறது. ரைபான் நீலத்தினை கொண்டு நிறமூடப்பட்ட பின் வேர்கள் பொட்டாசியம் ஐதரொட்சைட்டு கொண்டு சுத்தப்படுத்தப்படுவது வேரிலுள்ள பங்கசு கட்டமைப்பினை அவதானிப்பதற்கான பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற முறையாகும். ஆனால் தென்னை போன்ற கடுமையாக நிறமூட்டப்பட்ட வேர்களை தெளிவாக அவதானிப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலதிகமான படிநிலைகள் தேவைப்படுகின்றன.

மேலதிக படிநிலைகளான வேர் துண்டுகளை இரவு முழுவதும் ஊறவிடல், வெவ்வேறுபட்ட செறிவுகளை கொண்ட பொட்டாசியம் ஐதரொட்சைட்டு இல் இட்டப்பட்ட வேரின் பல சுழற்சி முறைகளிலான வெப்பப்படுத்தல், பொட்டாசியம் ஐதரொட்சைட்டு கரைசலில் இடப்பட்ட வேர்கள் வெவ்வேறுபட்ட நேர இடைவெளியில் அமுக்கவடுகலனில் கிருமியழிக்கப்படல், வேர்கள் ரைபான் நீலம் கொண்டு நிறமூட்டப்பட முன்னரும் அமிலமூட்டப்பட பின்னரும் வேரினை சுத்தப்படுத்த ஐதரசன் பரவொக்சைட்டு சேர்க்கப்பட்டு சில சேர்மானங்களில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அமுக்கவடுகலனில் கிருமியழிக்கப்பட்டதை தொடர்ந்து 10% பொட்டாசியம் ஐதரொட்சைட்டில் (KOH) இரவு முழுவதும் ஊற வைக்கப்பட வேண்டும். நிறமூட்டல் செயன்முறையினையும் ஆர்பஸ்குளார் மைக்கோரைசா என்ற பங்கசு அமைப்பினை கூட்டு நுணுக்குக்காட்டியின் கீழ் அவதானிப்பதை (உரு. 9.) மேம்படுத்தவும் வேர் துண்டுகளை புதிதாக தயாரிக்கப்பட்ட பொட்டாசியம் ஐதரொட்சைட் கரைசலில் இட்டு வேர் தெளிவானதாகவும் (உரு. 8.) ஒளிபுகும் தன்மை வரும் வரை வேருக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படாதவாறு கனலடுப்பொன்றில் 70ºC வெப்பநிலையில் சில தடவைகள் வெப்பப்படுத்த வேண்டும்.



உரு. 8. கடுமையாக நிறமூட்டப்பட்ட வேர்கள் (இடது) மற்றும் சிறந்த நீறமூட்டல் மற்றும் சாயம் நீக்கல் ஆகியவற்றுக்கான வழிமுறையில் சுத்தப்படுத்தப்பட்ட தென்னம் வேர்கள் (வலது)



உரு. 9. வெற்றிகரமான சுத்தப்படுத்தல் மற்றும் நிறமூட்டலின் பின்னர் கடுமையான நிறம் கொண்ட தென்னம் வேரில் ஆர்பஸ்கியூலர் மைகோரைசல் அமைப்புக்கள் (a) Inter-radical hyphae (b) Vesicles (c) Arbuscules (d)extra-radical hyphae (e) 70% நோய்த்தொற்றுக்குட்பட்ட வேரின் Arbuscules மற்றும் Inter-radical hyphae hyphal அமைப்புக்கள்.

மண் பதனாக்கியான உயிர்க்கரியினால் தென்னை வேர் வலயத்திலுள்ள வெசிகியூலர் ஆர்பஸ்கியூலர் மைகோரைசலின் (வேர் பூஞ்சணக் கூட்டம்) ஒன்றிய வாழ்வினை மேம்படுத்த முடியும்

மண் மற்றும் தாவர போஷணைப் பிரிவு

"தென்னை பெருந்தோட்டங்களில் மண் பதனாக்கியாக உயிர்க்கரி : போஷணை கிடைக்கப் பெறுவது மற்றும் தாவர வளர்ச்சி மேம்பாட்டில் அதன் தாக்கம்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மண்ணிலுள்ள பயன் தரக்கூடிய நுண்ணங்கிகளில் உயிர்க்கரியின் தாக்கம் தொடர்பிலான நீண்டகால களச் சோதனையொன்று 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட உயிர்க்கரி வகைகள் விவசாயம் சார்ந்த கழிவுப் பொருட்களான கிளிரீசிடியா தடிகள் மற்றும் நெல் உமி ஆகியனவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிர்க்கரியாகும். உயிர்க்கரி இடப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் களநிலை சோதனைகளிலிருந்து தென்னம் வேர்கள் சேகரிக்கப்பட்டு நுணுக்குக்காட்டியின் கீழ் அவதானிப்பதனூடாக உயிர்க்கரிப் பிரயோகத்தின் தாக்கம் மதிப்பிடப்பட்டது. உயிர்க்கரியின் பிரயோகம் ஆளுகை நிபந்தனையினை விட தென்னை வேரில் வேர் பூஞ்சணக் கூட்டத்தின் (vesicular-arbuscular mycorrhizae) நோய்த்தாக்கத்தினை அதிகரிப்பதாக ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. ஆனால் கிளிசீடியா உயிர்க்கரியானது உயிர்கரி அற்ற ஆளுகை பரிகரிப்பினை விட அதிகளவில் நோய்த்தொற்றினை காண்பித்தது. இந்த ஆராய்ச்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

பிரதானமான தென்னையினக் கன்றுகளின் பிளவு அல்லது பகுதியான பிளவு ஏற்பட்ட ஓலைகளின் இலை பரப்பினை மதிப்பிடுவதற்கு அழிவடையாத மாதிரிகளை உருவாக்கல்

தாவர உடற்றொழியியல் பிரிவு

பொதுவான வளர்க்கப்படுகின்ற தென்னை இரகங்களான நெட்டை × நெட்டை, பச்சை குட்டை × நெட்டை மற்றும் மஞ்சள் குட்டை × நெட்டை ஆகியனவற்றின் 1-3 ஆண்டு வயதினை கொண்ட மரங்களில் கிழிந்த அல்லது பகுதியளவில் கிழிந்த இலைகளின் பரப்பளவினை அனுமானிப்பதற்கு இலகுவானதும், துல்லியமானதும், செலவு குறைந்ததும் அழிக்க முடியாததுமான சூத்திரமொன்றை நிர்ணயிப்பதனை இந்த ஆய்வு நோக்காக கொண்டது. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் நாற்று மேடைகளில் இருந்து ஒவ்வொரு இரகத்தினதும் 60 ஓலை மாதிரிகள் எழுந்தமாறாக சேகரிக்கப்பட்டன. வெவ்வேறுபட்ட மாறித் தெரிவு நுட்பங்களை பயன்படுத்தி மாதிரியினை உருவாக்குவதில் பல்மடி ஏகபரிமாண பிற்செலவுப் பகுப்பாய்வு, பல்லுறுப்பு மாதிரிகள் மற்றும் முன் ஊட்ட நரம்பியல் வலையமைப்பு (FFNN) ஆகிய அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன. நெட்டை × நெட்டை, மஞ்சள் குட்டை × நெட்டை மற்றும் குட்டை × நெட்டை ஆகிய இரகங்களின் இலைப் பரப்பு எதிர்வு கூறலின் சிறந்த செயற்பாட்டினை முறையே துல்லிய பெறுமானத்தில் 0.91, 0.93 மற்றும் 0.86 இலக்கத்தில் 0.1761, 0.1378 மற்றும் 0.1701 சராசரி வர்க்க வழுவில் முன் ஊட்ட நரம்பியல் வலையமைப்பின் முடிவுகள் வெளிப்படுத்தின. அதியுயர் நீளம், கடைசியான உள்ள இரு ஓலைக்கீற்றுக்களின் சாராசரி நீளம் மற்றும் நடுவிலுள்ள மூன்று ஓலைக்கீற்றுக்களின் சராசரி அகலம் ஆகியன நெட்டை × நெட்டை இரகத்தின் சாரா மாறிகளாகும். அதியுயர் நீளம், கடைசியாக உள்ள இரு ஓலைக்கீற்றுக்களின் சாராசரி நீளம், இரு நுனிகளுக்கு இடைப்பட்ட தூரம், நடுவிலுள்ள மூன்று ஓலைக்கீற்றுக்களின் சராசரி நீளம் மற்றும் நடுவிலுள்ள மூன்று ஓலைக்கீற்றுக்களின் சராசரி அகலம் ஆகியன மஞ்சள் குட்டை × நெட்டை இரகத்திற்கு சாரா மாறிகளாகும். குட்டை × நெட்டை இரகத்தின் நடுவிலுள்ள மூன்று ஓலைக் கீற்றுகளின் சராசரி அகலம், அவற்றின் சராசரி நீளம் மற்றும் ஓலைக்கீற்றுகளின் எண்ணிக்கை ஆகியன சாரா மாறிகளாகும். எனினும் இந்த மாதிரிகள் களப் பயன்பாட்டுக்கு சிக்கலானதாகும். மேலும் துல்லியத்தன்மையினை விருத்தி செய்வதுடன் வலைப்பின்னல் வடிவமைப்பின் மறைந்துள்ள படைகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காக இந்த ஆய்வு தொடரப்பட்டது.




காலநிலை மாற்றத்தினால் தெங்கு உற்பத்தியில் ஏற்படும் பாதிப்பு

காலநிலையின் பாதிப்பினால் தேங்காய் உற்பத்தியில் ஏற்படுகின்ற மாற்றம்


தாவர உடற்றொழியியல் பிரிவு

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியானது நாட்டின் அனைத்து தென்னை வளர்கின்ற மாவட்டங்களிலும் உள்ள 900 இற்கு மேற்பட்ட தெங்குப் பெருந்தோட்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட விளைச்சல் தரவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. 2021 இல் வருடாந்த தேங்காய் உற்பத்தி 3382.9 மில்லியன் தேங்காய்கள் ஆகும். கடந்த காலங்களில் பெறப்பட்ட அதிகூடிய விளைச்சலாக காணப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டுடன் (2818.1 மில்லியன் தேங்காய்கள்) ஒப்பிடும் போது 2021 இல் 20% அதிகரித்துக் காணப்படுகிறது. 3வது (மே/ ஜூன்) (634.3 மில்லியன் தேங்காய்கள்) பறிப்பில் உயர்வு புள்ளியினை கொண்ட இந்த ஆண்டில் அவதானிக்கப்பட்ட விளைச்சலின் மாறுபாட்டுக் கோலமானது பொது கோலத்தினை ஒத்ததாகவே காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியானது 2021 ஆண்டுக்கான எதிர்வு கூறலினை (3353.1 ± 29.3 மில்லியன் காய்கள்) அண்மித்துக் காணப்பட்டதுடன் எதிர்வு கூறலினை விட 1% அதிகரிப்பினை மாத்திரமே கொண்டிருந்தது.

(a)



(b)




	Jan / Feb	Mar / Apr	May / Jun	Jul / Aug	Sep / Oct	Nov / Dec
ANCP 2020	418.80	525.50	553.10	507.20	443.10	370.47
ANCP - 2021	470.63	580.86	634.30	619.18	562.56	515.39

உரு. 1 (a) இரு மாதங்களுக்கு ஒரு முறையான 2021 ஆம் ஆண்டின் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தி மற்றும் அந்த ஆண்டுக்கான எதிர்வு கூறலுடனான ஒப்பீடு (b) 2020 ஆம் ஆண்டின் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியுடனான அதன் ஒப்பீடு

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் அதியுயர் உற்பத்திக்கு பிரதானமான தென்னை வளரும் பிரதேசங்களில் 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதி மற்றும் 2021 ஆம் ஆண்டு முழுவதும் கிடைக்கப்பெற்ற அதிகளவிலான சீரான மழைவீழ்ச்சியே பங்களிப்பு செய்தது. மழைவீழ்ச்சி பதிவுகளின் படி அனைத்து தென்னை வளர்கின்ற மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக அனைத்து வளிமண்டலவியல் நிலையங்களிலும் பெறப்பட்ட 2021 ஆம் ஆண்டின் (2268.9 மி.மீற்றர்) வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியானது 2020 ஆம் ஆண்டினை (1534.9 மி.மீற்றர்) விட 48% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. 2020 அம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் அதியுயர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றில் கண்டி (105%), அம்பாந்தோட்டை (101%) மற்றும் மன்னார் (101%) ஆகிய 3 மாவட்டங்களில் ஒப்பீட்டளவில் கடந்த வருடத்தினை விட இரு மடங்கான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றிருக்கிறது. மொனராகலை (88%), புத்தளம் (82%), மாத்தளை (80%), இரத்தினபுரி (75%), அம்பாறை (67%), கம்பஹா (61%) மற்றும் களுத்துறை (50%) ஆகிய 7 மாவட்டங்களிலும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் 50% இற்கு அதிகமான அதியுயர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றது. ஏனைய மாவட்டங்களிலும் அதிகளவிலான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதன் அளவுகளில் வேறுபாடு காணப்படுகிறது. இவற்றில் அதியுயர் அளவிலான மழைவீழ்ச்சி அனுராதபுரத்திலும் (45%) அதி குறைந்த மழைவீழ்ச்சியானது மட்டக்களப்பிலும் (4%) பதிவாகியுள்ளது. கடந்த 10 வருட காலப்பகுதியில் தென்னை வளரும் மாவட்டங்களின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியின் படி 2021 ஆம் ஆண்டில் அதியுயர் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மேலும் ஒரு சில உலர் வலய மாவட்டங்கள் தவிர்ந்த பெரும்பாலான தென்னை வளர்கின்ற மாவட்டங்களில் உயர் காற்று

வெப்பநிலையின் நிலைமாறும் அளவானது 30°C இலும் குறைவாகவே காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் உயர்ந்த விளைச்சலானது அவதானிக்கப்பட்டதற்கு சாதகமான மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை ஆகியன பங்களிப்பு செய்திருந்தன.



உரு. 2. தென்னை வளரும் மாவட்டங்களில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்த மழைவீழ்ச்சியின் (மி.மீற்றர்) ஒப்பீடு



தெங்குத் பெருந்தோட்டங்களில் வெள்ளை ஈ இன் தாக்கம்

பயிர் பாதுகாப்புப் பிரிவு

2019 ஆம் ஆண்டிலிருந்து புதிதாக வெள்ளை ஈ யின் தாக்கம் பிரதானமாக ஈர வலயத்தில் பதிவாகியதுடன் 2021 இலும் இதன் பரவல் தொடர்ந்து காணப்பட்டது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கடுமையான நோய்த்தாக்கம் பதிவாகியுள்ளது. வெள்ளை ஈ யின் குடித்தொகை மிக அதிகமாக காணப்படும் போது இவை தென்னங்குரும்பை மற்றும் தென்னோலை மட்டையினையே தாக்குகின்றன. ஏனைய பயிர்களான வாழை, கறிவேப்பிலை, கொட்டங்காய், கமுகு, அலங்கார பன்னத் தாவரங்கள் மற்றும் ஏனைய செடிகளான மிளகாய், கத்தரி மற்றும் ஏனைய ஓராண்டு மற்றும் பல்லாண்டு பயிர்களில் இவற்றை காணலாம். வெள்ளை ஈ யின் இனம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பூச்சி இனங்களை அடையாளம் காண்பதற்காக கேகாலை, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஆய்வொன்று நடத்தப்பட்டது.

வெள்ளை ஈ இனது மூன்று இனங்கள் அடையாளம் காணப்பட்டன. அவையாவன *Aleurodicus dispersus, Paraleyrodes minei* மற்றும் *Aleurotrachelus atratus* ஆகியனவாகும். மொத்த குடித்தொகையில் *A. atratus* இன் குடித்தொகை 55.7% ஆக காணப்படுகிறது. *Jauravia pallidula* என்பது *A. atratus* உடன் தொடர்புடைய இயற்கை எதிரியொன்றாக கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் *J. pallidula* அளவு மிகக் குறைவாகும். *Panonychus ulmi* (ஐரோப்பிய சிவப்பு சிற்றுண்ணி), *Brevipalpus californicus* (கடும் சிவப்பு நிற சிற்றுண்ணி) மற்றும் மாவுப் பூச்சி ஆகியன தென்னை வெள்ளை ஈ உடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட பூச்சி இனங்களாகும். ஆனால் இவை மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. குழுவாகவுள்ள வெள்ளை ஈ இன் நிலவுகை மாவட்டங்களுக்கு இடையில் கணிசமான அளவு வேறுபட்டு காணப்படவில்லை. ஆனால் இவற்றின் தனிப்பட்ட இனங்களின் நிலவுகை மாவட்டங்களுக்கிடையிலும், அமைவிடங்களுக்கிடையிலும் மற்றும் தென்னை மரங்களுக்கு இடையேயும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டு காணப்பட்டது.



உரு. 1. கொழும்பு முட்வல் பகுதியில் கடுமையாக வெள்ளை ஈ தாக்கத்திற்கு உள்ளான தென்னையின் காய்கள் மற்றும் தென்னோலை மட்டை

கபிலம் அல்லது மஞ்சள் நிற காய் கொண்ட தென்னை மரங்கள் மற்றும் செவ்விளநீர் தென்னை மரங்கள் ஆகியவை பச்சை நிறமான காய் கொண்ட தென்னை மரங்களினை விட மோசமாக பாதிக்கப்பட்டன.

வெலிகம தென்னோலை வாடல் நோய் மற்றும் இலை கருகல் ஆகியவற்றுடன் தொடர்புடைய புரோகரியோட்டினது மூலக்கூற்றினை கண்டறிதல்

பயிர் பாதுகாப்புப் பிரிவு

வெலிகம தென்னோலை வாடல் நோய் மற்றும் இலை கருகி சரிவடைவதுடன் தொடர்புடைய புரோகரியோட்டின் மூலக்கூற்று கண்டறிதலுக்காக ஆய்வுகள் நடாத்தப்பட்டது. நான்கு தடவையிலான மாதிரியெடுத்தல் நிறைவு செய்யப்பட்டது. காழ்-உரிய வரையறைக்குட்பட்ட புரோகரியோட்டு தாவர நோய்க்கிருமியினை அடையாளம் காண்பதற்கான பல்பகுதிய சங்கிலி தாக்க சோதனைக்காக வெலிகம தென்னோலை வாடல் மற்றும் இலை கருகல், பகுதியளவு ஆரோக்கியமான மற்றும் ஆரோக்கியமான தென்னை மரங்களிலிருந்து மொத்தமான 372 இழைய மாதிரிகள் பெறப்பட்டன. நேர்ப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றதுடன் Sanger தொடரிப்படுத்தலுக்குட்படுத்தப்பட்ட போது தெளிவான DNA பட்டிகள் கிடைக்கப் பெற்றன. முடிவுகள் பம்பரையலகு வங்கி வைப்புக்களுடன் ஒப்பிடப்பட்டன. அனைத்து தொடரிப்படுத்தல்கள் பைடோபிளாஸ்மாவினால் ஏற்படுகின்ற கரும்பின் வெள்ளை நோயினை 99-100% ஒத்திருந்தன. NCBI மூலம் BLASTn இன் ஒப்புமை தேடலின் படி ஏழு புதிய பைடோபிளாஸ்மா தனிமைப்படுத்தல்கள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் பரம்பரையலகு வங்கியில் சேமிக்கப்பட்டன (அட்டவணை 1). இது வரை பைடோபிளாஸ்மா தவிர்ந்த வேற எந்தவொரு புரோகரியோட்டும் PCR சோதனைக்கு நேர் முடிவினைத் தரவில்லை.

அட்டவணை 1. வெலிகம தென்னோலை வாடல் நோயுடன் தொடர்பான புதிய பைடோபிளாஸ்மா தனிமைப்படுத்தல்கள்

மாதிரி அடையாளம்	BLASTn உடன் சிறந்த முறையில் பொருந்தும் நோய்க்கிருமி	ஒப்புமை சதவீதம்	இணைவு இலக்கம்
வெலிகம தனிமைப்படுத்தல் 1	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	100	MZ822450
வெலிகம தனிமைப்படுத்தல் 2	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	99.88	MZ822449
வெலிகம தனிமைப்படுத்தல் 3	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	100	MZ822431
வெலிகம தனிமைப்படுத்தல் 4	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	98.83	MZ822432
வெலிகம தனிமைப்படுத்தல் 5	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	99.65	MZ822428
வெலிகம தனிமைப்படுத்தல் 6	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	99.77	MZ822430
வெலிகம தனிமைப்படுத்தல் 7	கரும்பின் வெள்ளை இலை பைடோபிளாஸ்மா	99.64	MZ822429

மூலக்கூறினை கண்டறிவதன் மூலம் வெலிகம தென்னோலை வாடல் நோய்ப் பாதிப்புக்குட்பட்ட பிரதேசத்தில் தென்னோலைக் கருகல் நோயுடன் பைடோபிளாஸ்மாவுடனான தொடர்பினை கண்டறிதல்

பயிர் பாதுகாப்புப் பிரிவு

வெலிகம பிரதேசத்தில் இலை கருகல் நோய்த்தாக்கத்திற்குட்பட்ட தென்னைகளிலிருந்து பெறப்பட்ட ஓலை, பூந்துணர் மற்றும் வேர் மாதிரிகளிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட CTAB முறை மற்றும் கல PCR ஆகியனவற்றை பயன்படுத்தி பைடோபிளாஸ்மாவிற்கான தனியான universal primers 16s rRNA பகுதியில் ஓட்டு மொத்த ஜீனோமிக் DNA பிரித்தெடுக்கப்பட்டது. PCR சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளில் குருத்தோலை, பூந்துணர் மற்றும் வேர் இழையங்களின் சோதனையின் நேர் பெறுபேறுகள் முறையே 83%, 8%, 25% ஆகும். தெரிவு செய்யப்பட்ட PCR பெறுபேறுகள் Sanger தொடரிப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. பிரித்தெடுக்கப்பட்ட நோய்க்கிருமிகள் 99-100% கரும்பின் வெள்ளை இலை அல்லது புல் அரும்பு நோய் பைடோபிளாஸ்மாவினை ஒத்ததாக தொடர்கள் காணப்படுவதை BLAST முடிவுகள் உறுதிப்படுத்தின. அத்துடன் பைடோபிளாஸ்மா நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட இலை கருகல் நோய் கொண்ட தென்னைகள் வெலிகம தென்னோலை வாடல் நோய்க்கான அறிகுறிகளற்றவையாக காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக வெலிகம தென்னோலை வாடல் நோய் காணப்படாத பிரதேசங்களில் இலை கருகல் நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இழையங்களின் மாதிரிகளின் PCR நேர்ப் பெறுபேறு இதுவரை அவதானிக்கப்படவில்லை. எனவே இலை கருகல் நோயின் நோயாக்கக் காரணி பைடோபிளாஸ்மா என உறுதிப்படுத்துவதற்கான தெளிவான சான்றுகள் எதுவும் இல்லை. இது தெற்கு பிரதேசத்தில் இலை கருகல் நோய் கொண்ட தென்னைகளின் பைடோபிளாஸ்மாவின் இரண்டாம் நிலை தொற்றின் காரணமாக இருக்கலாம். வெலிகம தென்னோலை வாடல் நோய் காணப்படாத பிரதேசங்களில் இருந்து பெறப்பட்ட இழைய மாதிரிகளின் இலைகருகல் நோயிற்கான காரணத்தை உறுதி செய்யப்படுவதற்காக மேலதிக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

வெலிகம தென்னோலை வாடல் நோயுடன் தொடர்புடைய பைடோபிளாஸ்மாவின் குடித்தொகை அளவிலான மூலக்கூற்றினை இனங்காண்பதற்கான சிறந்த இழைய மாதிரியெடுத்தலை தெரிவு செய்தல்

பயிர் பாதுகாப்புப் பிரிவு

தென்னையின் உயரமான தோற்றம் மற்றும் மிகக்குறைந்த செறிவில் நோய்க்கிருமிகள் காணப்படுவது ஆகியன காரணமாக ஏனைய பயிர்களை போலன்றி தென்னையில் மூலக்கூற்றினை கண்டறிவதற்கு போதுமான அளவான பைடோபிளாஸ்மாவின் மாதிரி சேகரிப்பதென்பது சவாலாக காணப்படுகிறது. ஆகவே திருத்தமாக நோய்க்கிருமியினை இனங்காண்பதற்காக பொருத்தமான இழையத்தினை அடையாளம் காணல் அவசியமானதாகும். எனவே தென்னை மரத்தில் இந்த நோய்க்கிருமியின் இழைய பரம்பலினை வரையறுப்பதற்காகவும் குடித்தொகை அளவிலான ஆய்விற்காக சிறந்த இழைய வகை மாதிரியினை அடையாளம் காண்பதற்காகவும் இந்த ஆய்வானது நடாத்தப்பட்டது. நோய் அறிகுறி கொண்ட மற்றும் ஓரளவு ஆரோக்கியமான தென்னை மரங்களிலிருந்து பெறப்பட்ட குருத்தோலையானது பைடோபிளாஸ்மாவினது குடித்தொகை அளவிலான மூலக்கூற்று இனங்காணல் சோதனைக்கு மிகச் சிறந்த மாதிரி இழையமாகும். (அட்டவணை 2)

அட்டவணை 2. வெலிகம தென்னோலை வாடல் நோய் பாதிப்புக்குள்ளான பிரதேசத்திலுள்ள பைடோபிளாஸ்மாவிற்கான வேறுபட்ட தென்னை இழைய மாதிரிகளின் PCR இன் நேர் மறை சதவீதம்

மாதிரி வகை	இழைய வகை	மாதிரிகளின் எண்ணிக்கை	நேர் மாதிரிகளின் எண்ணிக்கை	PCR நேர் மறை சதவீதம்
நோய் அறிகுறிகளை உடைய தென்னை மரம்	குருத்தோலை	18	15	83%
	இளம் பூந்தளிர்	18	6	33%
	வேர்	18	6	33%
நோய் அறிகுறிகளற்ற தென்னை மரம்	குருத்தோலை	18	16	88%
	இளம் பூந்தளிர்	18	2	11%
	வேர்	18	4	22%
வெலிகம பிரதேசத்தில் இலை கருகல் நோய் அறிகுறி கொண்ட தென்னை மரங்கள்	குருத்தோலை	18	16	88%
	இளம் பூந்தளிர்	18	1	5%
	வேர்	18	7	38%

நோய்த் தாக்கத்திற்குட்பட்ட தென்னைகளில் உரிய இழையங்களின் ஊடாக வெலிகம தென்னோலை வாடல் நோயினை ஏற்படுத்துகின்ற பைடோபிளாஸ்மாவின் இடமாற்றம் மற்றும் நோய் உட்பரவலுக்கான சான்று

பயிர் பாதுகாப்புப் பிரிவு

பைடோபிளாஸ்மாவானது உரிய நெய்யரிக் குழாய்கள் ஊடாக கொண்டு செல்லப்படுவதுடன் தாழி இழையங்களில் ஒன்று சேர்கிறது. பைடோபிளாஸ்மா நோயாக்கிகள் யாவும் காவிகள் மூலம் பரவுகின்றன. இளவயதான ஓலைகள் முதன்மை நோய்த்தாக்க இடங்களாக உள்ளன. வெலிகம தென்னோலை வாடல் நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட தென்னை மரங்களில் பைடோபிளாஸ்மாவினது இடப்பெயர்வினை கண்டறியவும் நோய்த்தாக்கத்தின் உட்பரவும் இயல்பை உறுதி செய்யவும் இந்த ஆய்வு நடாத்தப்பட்டது.

பைடோபிளாஸ்மா நோயாக்கிகள் காணப்படுவதை, பூந்துணர் மற்றும் வேர் இழையங்களின் DNA தொடரிப்படுத்தல் மூலம் அடையாளம் காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. பைடோபிளாஸ்மா நோய்கள் யாவும் காவிகள் மூலம் பரவுகின்றன. காவிகள் இலைகளின் நெய்யரிக் கலங்களில் துளையினை உருவாக்கி நோய்க்கிருமிகளை பரப்புகின்றன. நெய்யரிக் குழாய்களின் ஊடாக நோய்க்கிருமிகள் கொண்டு செல்லப்படவில்லையெனில் தென்னை மரத்தின் எந்தவொரு இழையத்திலும் நோய்க்கிருமி காணப்படாது. ஆனால் இந்த ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகளின் படி இலைகளிலிருந்து வெகு தொலைவிலுள்ள பூந்துணர் மற்றும் வேரிழையங்களில் பைடோபிளாஸ்மா நோயாக்கிகள் அவதானிக்கப்பட்டன. நெய்யரிக் குழாய்கள் தென்னையின் ஓலை மற்றும் ஏனைய பகுதிகளுடன் ஒன்றோடொன்று

இணைந்திருக்கும். இது வலையமைப்பொன்றினையும் உருவாக்கிறது. வெலிகம தென்னோலை வாடல் நோயினை ஏற்படுத்துகின்ற பைட்டோபிளாஸ்மா, உரிய நெய்யரிக் குழாய் ஊடாக கொண்டு செல்லப்படுவது மற்றும் அதன் முறையான தொற்று ஆகியன உறுதிப்படுத்தப்பட்டன.

வெலிகம தென்னோலை வாடல் நோய்த்தாக்கத்தின் அறிகுறிகள் வெளிப்படுவதற்கு முன்னரான அடைகாக்கும் காலம்

பயிர் பாதுகாப்புப் பிரிவு

வெலிகம தென்னோலை வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட அனைத்து தென்னை மரங்களும் ஒரே தடவையில் அறிகுறிகளை காண்பிப்பதில்லை. அறிகுறிகளின் வெளிப்படுவதற்கு முன்னதான காலப்பகுதி அடைகாக்கும் காலமாக இருப்பதேயாகும். தென்னை மரங்களில் நோய்க்கிருமித் தாக்கம் ஏற்பட்டு அறிகுறிகள் தோன்றுவதற்கு இடைப்பட்ட காலமே அடைகாக்கும் காலம் என கருதப்படுகிறது. நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட தென்னை மரங்களை அறிகுறிகளின் அடிப்படையில் அடையாளம் கண்டு கொள்வதில் இந்த தோற்றப்பாடு குறிப்பிடத்தக்கவொரு பிரச்சினையாக உள்ளது. அடைகாக்கும் காலம் காரணமாக மரத்தினை அவதானித்து எந்தவொரு கணிப்பினையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. ஆரோக்கியமாக தோற்றமளிக்கின்ற மரங்களில் மறைந்த நிலையில் நோய்த்தொற்று காணப்படக்கூடும். ஆகவே இலங்கையின் வெலிகம தென்னோலை வாடல் நோயுடன் அடைகாக்கும் காலம் தொடர்புபட்டுள்ளதா என்பதை விஞ்ஞான ஆதாரங்களுடன் அடையாளம் காண்பதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது.

அட்டவணை 3. இரு தடவையான மாதிரியெடுத்தலின் பைடோபிளாஸ்மாவிற்கான PCR நேர் அல்லது மறை பெறுபேறுகள் மற்றும் அதன் அறிகுறி பதிவுகள்

தென்னை இல.	PCR நேர் அல்லது மறை பெறுபேறுகள் மற்றும் அதன் வெலிகம தென்னோலை வாடல் நோயின் அறிகுறி வெளிப்பாடு							
	1 வது PCR			அறிகுறிகள்	2 வது PCR (ஒரு வருடத்தின் பின்னர்)			அறிகுறிகள்
	BL	IF	RT		BL	IF	RT	
1	நேர்	மறை	மறை	இல்லை	நேர்	மறை	மறை	இல்லை
2	நேர்	மறை	மறை	இல்லை	நேர்	நேர்	மறை	இல்லை
3	நேர்	மறை	மறை	இல்லை	நேர்	மறை	மறை	இல்லை
4	நேர்	மறை	மறை	இல்லை	நேர்	நேர்	மறை	இல்லை
5	நேர்	மறை	மறை	இல்லை	நேர்	மறை	நேர்	இல்லை

BL - குருத்தோலை, IF - பூந்துணர், RT - வேர்

முடிவுகளின் படி (அட்டவணை 3), வெலிகம தென்னோலை வாடல் நோயின் அறிகுறிகளற்ற

தென்னை மரங்களினால் பைட்டோபினாஸ்மா தொற்றினை நீண்ட காலத்திற்கு எதுவித அறிகுறிகளையும் வெளிப்படுத்தாது மறைக்க முடியும் என்பது தெளிவாகிறது. இந்த காலப்பகுதியில் நோய்த்தொற்று இரு மரங்களினது பூந்துணர்களுக்கும் இன்னொரு மரத்தின் வேருக்கும் பரவுகிறது. இந்த விடயத்தில் குறைந்தது ஒரு வருட காலப்பகுதிக்கு அனைத்து தென்னைகளும் அறிகுறிகள் அற்றதாகவே இருக்கிறது. நோய்த்தொற்று ஏற்பட்ட தொடக்க நாளினை அனுமானிக்கின்ற ஆற்றல் இன்மை காரணமாக இந்த காலப்பகுதி இதனை விட அதிகமாக இருக்கக்கூடும். எனவே வெலிகம தென்னோலை வாடல் நோய்க்கான அடைகாக்கும் காலம் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு அதிகமான காணப்படுவது உறுதி செய்யப்பட்டது. இந்த ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

வெலிகம தென்னோலை வாடல் நோய் மற்றும் இலைக்கருகல் நோயினை கட்டுப்படுத்துவதற்காக SAR தூண்டியின் பயன்பாடு

பயிர் பாதுகாப்புப் பிரிவு

வெலிகம தென்னோலை வாடல் நோய் மற்றும் இலைக்கருகல் நோயினை கட்டுப்படுத்துவதற்காக SAR தூண்டியின் பயன்பாட்டின் தாக்கத்தை அடையாளம் காண்பதற்காக சோதனையொன்று நடாத்தப்பட்டது. நான்கு தடவை SAR தூண்டி பிரயோகிக்கப்பட்டதுடன் அறிகுறிகள் பதிவுகள் நிறைவு செய்யப்பட்டன. ஆளுகை நிபந்தனையின் கீழான தென்னை மரங்களுடன் ஒப்பிடும் போது பரிகரிக்கப்பட்ட மரங்களின் நோய்த் தீவிரத்தன்மை சுட்டி குறைவடைவது அவதானிக்கப்பட்டது. இந்த ஆய்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.



தூய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான தேங்காய்ப் பாலின் நொதிப்பினை வேகமாக்குவதற்கான நுண்ணுயிர்களின் பிரித்தெடுப்பு

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

தூய தேங்காய் எண்ணையானது தேங்காய்ப் பாலைப் பயன்படுத்தி வெப்பத்தினை பிரயோகிக்காது தயாரிக்கப்படுகின்ற தேங்காய் எண்ணையாகும். இந்த செயன்முறையில் தேங்காய் பாலிலுள்ள எண்ணெய் இயற்கையாக பிரிவதற்கு அனுமதிக்கப்படுகிறது. இதற்கு 24-48 மணித்தியாலங்கள் எடுக்கிறது. இந்த முறை தூய தேங்காய் எண்ணெய் தயாரிப்பில் இயற்கை நொதித்தல் முறையாக அறியப்படுகிறது. இந்த செயன்முறையினை வேகமாக்குவதற்கான வினைதிறனான நுண்ணங்கிகளை கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். வேறுபட்ட 8 வகையான நுண்ணங்கிகள் இயற்கையாக நொதிப்படைந்த தேங்காய்ப் பாலில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டு இவை உயிர்-இரசாயன சோதனை மூலம் அடையாளம் காணப்பட்டன. இந்த நுண்ணங்கிகள் கீழே பட்டியல் இடப்பட்டுள்ளது.

A-*Eubacterium*
B-*Flavobacterum*
C-*Lactobacillus*
D-*Lactobacillus*
E-*Erysipelothrix*
F-*Eubacterim*
G–*Acinetobacter*
H-*Erysipelothrix*

இயற்கையான நொதித்தல் செயன்முறைக்கான வினைதிறனான நுண்ணங்கியினை இனங்காண்பதற்காக பிரித்தெடுக்கப்பட்ட நுண்ணங்கிகள் தனித்தனியாகவும் கூட்டாகவும் நொதித்தல் செயன்முறைக்கு பயன்படுத்தப்பட்டன. இறுதியாக, மிகக்குறைந்த காலப்பகுதியில் அதிகளவான எண்ணையினை விளைவாக உற்பத்தியாக்கிய நுண்ணங்கியினை தெரிவு செய்வதற்காக விளைவாக பெறப்பட்ட தூய தேங்காய் எண்ணெய் அளவிடப்பட்டது. மிகக்கூடிய கனவளவு கொண்ட எண்ணை ***Lactobacillus*** இனால் பதிவு செய்யப்பட்டது. இந்த ஆய்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

தேங்காய் வெண்ணெய் உருவாக்கம்

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

முன்னர் உருவாக்கப்பட்ட தேங்காய் வெண்ணெய் ஆனது மேலதிகமான விருத்திக்காக உலர்த்தப்பட்ட தேங்காய் (DC), சீனி, கச்சான், கொக்கோ தூள் மற்றும் உப்பு ஆகியன கொண்டு தேங்காயின் தனித்துவமான சுவையுடன் உருவாக்கப்பட்டது. புலணுணர்வு பகுப்பாய்வினூடாக 65% DC, 25% சீனி மற்றும் 0.5% உப்புக் கொண்ட சூத்திரமானது தனித்துவமான தேங்காயின் சுவையினை காப்பதான சிறந்த பரிகரிப்பாக தெரிவு செய்யப்பட்டது. அறை வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்படும் போது படை வேறாக்கமடைவது இந்த உற்பத்தியினது பிரதானமான பிரச்சினையாக காணப்படுகிறது. படை வேறாக்கத்தினை இழிவளவாக்க மூன்று வேறுபட்ட அளவுகளில் பாம் ஸ்டெரின் மற்றும் சோயா லெசிதின் ஆகியன சேர்க்கப்பட்டன. தேங்காய் வெண்ணெயினது படை வேறாக்கத்தினை இழிவளவாக்க 10% சோளம் மாவுடன் இணைந்த 1.5% பாம் ஸ்டெரின் ஆனது சிறந்த குழம்பாக்கியாக தெரிவு செய்யப்பட்டது. இது தொடர்பிலான சோதனைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.



உரு 1. தேங்காய் வெண்ணெய்

பிரித்தெடுக்கப்பட்ட தேங்காய் புரதத்திலிருந்து தயாரிக்கப்பட்ட உக்கலடையக்கூடிய பொதி செய்யும் பதார்த்தம்


தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

தூய தேங்காய் எண்ணெய் பிரித்தெடுப்பிலிருந்து பெறப்பட்ட கொழுப்பு நீக்கப்பட்ட நீரற்ற தேங்காய் சக்கையிலிருந்து செறிவாக்கப்பட்ட தேங்காய் புரதத்தினை பயன்படுத்தி உக்கலடையக்கூடிய மென்படலங்கள் உருவாக்கப்படுவது தொடரப்பட்டது. உயர்ந்த pH பெறுமானம், சோளமா, தேங்காய் புரதம் மற்றும் பொலி எதிலீன் கிளைகோல் (PEG) ஆகியனவற்றின் செறிவுகள் என்பன காரணி வடிவமைப்பின் படி ஒழுங்கமைக்கப்பட்டன. 3% அளவிலான தேங்காய் புரதத்தினை பயன்படுத்தி PEG (2% கிளிசரோல்) சேர்க்கப்படாத, pH பெறுமானம் 8.5 ஆக சீர்செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட படலம் உயர்ந்த ஒட்டு மொத்தமான ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்டதாக ஆய்வின் மூலம் முடிவு செய்யப்பட்டது.


கண்ணாடி தட்டுக்களை பயன்படுத்தி படலத்தின் அளவு பெரிதாகப்பட்டதுடன் படலத்தின் நுண்ணங்கி நிரோதிப்பு இயல்பினை விருத்தி செய்யவதற்காக கறுவா தூள் இரண்டு

அளவுகளில் (0% - P1, 0.05% - P2 மற்றும் 0.1% - P3) சேர்க்கப்பட்டன. மாதிரியின் நுண்ணங்கி நிரோதிப்பு தொழிற்பாடானது பரவல் முறையின் மூலம் அளவிடப்பட்டதுடன் கறுவாத் தூளின் அதிகரிப்புடன் நுண்ணங்கிகளின் வளர்ச்சி குறைவடைந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. பெறுமதி சேர்ப்பாக கறுவா தூள் சேர்க்கப்பட்ட போது படலத்தின் தடிப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. ஒப்பீட்டளவில் 0.05% கறுவா சேர்க்கப்பட்டதினை விட 0.1% கறுவா சேர்க்கப்பட்ட போது கணிசமான அளவு உயர் தடிப்பினைக் கொண்ட (0.3 மி.மீற்றர்) படலம் கிடைக்கப் பெற்றது. 0.1% கறுவா சேர்க்கப்பட்ட மாதிரியினை விட 0.05% சேர்க்கப்பட்ட மாதிரியின் உயர் வீக்க குறியீடு 193.65% முடிவாக பெறப்பட்டது.


பொதியிடல் பதார்த்தத்தின் மேலதிகமான ஆய்வு மற்றும் பிரயோகம் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.



P1 -0% கறுவா



P2 – 0.05% கறுவா



P3 -0.1%



P4 - கட்டுப்பாட்டு சோதனை / cling wrap

உரு. 2. வேறுபட்ட செறிவுகளில் கறுவாத் தூள் இடப்பட்ட பொதியிடல் பதார்த்தத்தின் நுண்ணங்கி நிரோதிப்பு தொழிற்பாடு

பாரம்பரிய முறையில் சேகரிக்கப்பட்ட தென்னம் பதனீரிலிருந்து தயாரிக்கப்பட்ட தென்னை வெல்லத்தின் கிளைசெமிக் சுட்டி

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

தென்னை வெல்லத்தின் கிளைசெமிக் குறிகாட்டியை கண்டுபிடிப்பதற்காக 40 நபர்களை பயன்படுத்தி மருத்துவ சோதனை ஒன்று பூர்த்தி செய்யப்பட்டது.

வெல்லத்தின் குளுக்கோஸ் சோதனை மற்றும் கிளைசெமிக் குறிகாட்டி ஆகியன குங்கிலிய பட்டை சேர்க்கப்பட்டு பாரம்பரிய பதனீர் சேகரிப்பு முறையில் தயாரிக்கப்பட்ட வெல்லம் (HAL), புதிய முறையில் பதனீர் சேகரிக்கப்பட்டு 0.2% கறுவா (NUT) மற்றும் 0.05% சாதிக்காய் (CIN) சேர்க்கப்பட்ட பெறுமதி சேர்ப்பு வெல்லம் ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டன. நடுத்தர அளவிலான கிளைசெமிக் குறிகாட்டி பிரிவில் அடங்குகின்ற 3 வகையான வெல்லங்கள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. குங்கிலிய பட்டை இன்றி பெறப்பட்ட தூய பதனீரின் கிளைசெமிக் குறிகாட்டி பெறுமானம் 65.19 ஆகும். கரும்பினை கொண்டு தயாரிக்கப்பட்ட சீனியின் கிளைசெமிக் குறிகாட்டி பெறுமானம் 60.76 ஆகும். குங்குலியப் பட்டை, சாதிக்காய் மற்றும் கறுவா ஆகியன சேர்க்கப்படுகின்ற போது கிடைக்கப் பெற்ற கிளைசெமிக் குறிகாட்டியின் சராசரி பெறுமானங்கள் முறையே 55.79, 57.56 மற்றும் 59.45 ஆகும். குங்குலியப் பட்டை, சாதிக்காய் மற்றும் கறுவா ஆகியன தென்னை வெல்லத்திற்கு சேர்க்கப்படுகின்ற போது கிளைசெமிக் குறிகாட்டி குறைவடைவதாக முடிவுகள் காண்பிக்கின்றன.

அட்டவணை 1 : பெறுமதி சேர்க்கப்பட்ட தென்னை வெல்ல வகைகளின் கிளைசெமிக் குறிகாட்டி

வெல்ல வகை	கிளைசெமிக் குறிகாட்டி	கிளைசெமிக் பிரிவு
HAL வெல்லம்	55.79	நடுத்தர GI
NUT வெல்லம்	57.56	நடுத்தர GI
CIN வெல்லம்	59.45	நடுத்தர GI

கொழுப்பு நீக்கப்பட்ட டெஸ்டா மா சேர்த்து தயாரிக்கப்பட்ட ரொட்டி மற்றும் பிட்டு

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

தெங்குப் பதனீட்டு தொழிற்சாலைகளில் மிகவும் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற உப உற்பத்தி பொருளான தேங்காய் டெஸ்டாவினை வெற்றிகரமாக பயன்படுத்தி ரொட்டி மற்றும் பிட்டு தயார் செய்யப்பட்டது. கொழுப்பகற்றப்பட்ட டெஸ்டா மா மற்றும் கோதுமை மா ஆகியன (20%: 80%) என்ற விகித்தில் கலக்கப்பட்டு அத்துடன் 60 கிராம் தேங்காய் சொட்டு, 30 மி.லீற்றர் நீர், 3.5 கிராம் உப்பு ஆகியன சேர்க்கப்பட்டு ரொட்டிக்காகவும் 60 கிராம் தேங்காய் சொட்டு, 15 மி.லீற்றர் நீர், 2 கிராம் உப்பு ஆகியன சேர்க்கப்பட்டு பிட்டுக்காகவும் சிறந்த விகிதங்களாக தெரிவு செய்யப்பட்டன.

ரொட்டி மற்றும் பிட்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட சேர்க்கையின் இயல்புகள் கோதுமை

மாவின் இயல்புகளுடன் ஒப்பிடப்பட்டன.

முடிவுகளின் படி, தெரிவு செய்யப்பட்ட கலவையினது (20% TF: 80% WF) பொங்கும் அளவு (SC), தோற்ற அடர்த்தி, தட்ட அடர்த்தி (TD), நீர் உறிஞ்சும் அளவு (WAC) ஆகியன 100% கோதுமை மாவுடன் (WF) குறிப்பிடத்தக்களவு வேறுபாட்டினை (P>0.05) கொண்டிருக்கவில்லை. எண்ணெய் உறிஞ்சும் அளவு (OAC) மற்றும் ஈரமாகும் தன்மை (WT) ஆகிய செயல்பாட்டு இயல்புகள் கலவையாக்கல் செயன்முறையுடன் கணிசமான அளவு மாற்றமடைந்தன. டெஸ்டா மாவின் சேர்க்கை, எண்ணெய் உறிஞ்சும் அளவினை விருத்தி செய்வதுடன் ஈரமாதலை எதிர்க்கும் செயலினை காட்டுகிறது.

அட்டவணை 2 : 20% TF: 80% WF கலவை மற்றும் 100% WF இன் தொழிற்பாட்டு இயல்புகள்

பண்புகள்	TF 20: WF 80 கலவை	WF 100%
SC (%)	15.67 ± 1.53[a]	16.33 ± 1.53[a]
BD (g/cc)	0.57 ± 0.01[a]	0.52 ± 0.03[a]
TD (g/cc)	0.77 ± 0.04[a]	0.78 ± 0.02[a]
OAC (%)	138.03 ± 4.75[a]	116.46 ± 6.98[b]
WAC (%)	154.60 ± 9.31[a]	134.24 ± 8.33[a]
WT (min)	0.34 ± 0.01[a]	1.38 ± 0.08[b]

சராசரி ± 3 சுயாதீன தீர்மானங்களின் நியம விலகலே இந்தப் பெறுமானங்களாகும். வேறுபட்ட மேலெழுத்துக்களுடனான பெறுமானங்கள் கொண்ட நிரை வேறுபட்டு (P<0.05) காணப்படுகிறது.

மாதிரிகளின் போஷணை தொடர்பிலான மேலதிகமான பகுப்பாய்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

தேங்காய் வித்தகவிழையத்தின் வெளியுறை மாவினது பினோலிக் மற்றும் ∴பிளாவனாய்டுகள் கூறுகள்

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் அடிப்படை கற்கை நெறிகள் தேசிய நிறுவனம்

உலர்த்திய தேங்காய் கைத்தொழிற்துறையில் பக்க விளைபொருளான தேங்காய் விதையின் வெளியுறை குறைவாக பயன்படுத்தப்படுகின்ற ஒன்றாகும். பெரும்பாலும் விலங்கு உணவாகவே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது உணவு பதப்படுத்தும் கைத்தொழிற்துறையின் செயல்பாட்டு மூலப்பொருளாக இருக்ககூடிய ஆற்றல் கொண்டிருக்கிறது. இந்த ஆய்வின் ஒட்டு மொத்தமான கண்டுபிடிப்பாக அனைத்து உள்நாட்டு தென்னை இரகங்களினதும் தேங்காய் வித்தகவிழையத்தின் வெளியுறை மா, பினோலிக் மற்றும் ∴பினாவனாய்டுகளின் அதிக கொண்ட மூலமாக இருப்பதுடன் ஒட்சி நிரோதி மற்றும் இரத்த வெல்ல அதிகரிப்பு காரணிகளின் நிரோதியாகவும் தொழிற்படக்கூடிய தன்மை கொண்டது. தனித்தனியாக தென்னை இரகங்களுக்கிடையிலான தாவர இரசாயனங்கள் பகிர்வு அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளது.

பினோலிக் (மில்லி கிராம்/ 100 கிராம்)	தென்னை இரகம்				
	COM	GT	RT	SR	TT
கா.்பிக் அமிலம்	1.50	1.60	1.34	1.40	1.51
குளோரோஜெனிக் அமிலம்	49.50	145.5	76.9	131.8	114.9
காலிக் அமிலம்	2.13	2.16	2.13	2.14	n.d.
எலாஜிக் அமிலம்	11.65	11.49	11.50	11.51	11.5
்.பெருலிக் அமிலம்	0.28	n.d.	0.29	0.31	n.d.
p - கூமரிக் அமிலம்	0.49	0.62	0.49	0.73	0.73
சினாபிக் அமிலம்	n.d.	n.d.	n.d.	n.d.	1.61
வெண்ணிலிக் அமிலம்	7.86	7.72	6.36	6.78	7.12
எபிகலோகேடேசின் கலேற்று	2.73	3.28	3.00	3.26	3.09
குவெர்செடின்	6.32	6.33	6.34	6.37	6.35
ருடின்	1.92	1.45	1.50	1.52	1.57

சுருக்கக் குறியீடு: COM, வர்த்தக ரீதியான கலப்பினம் GT, கொன் தெம்பிலி RT, ரன் தெம்பிலி SR, சன் ராமன் TT, நெட்டை x நெட்டை n.d, கண்டறியப்படவில்லை.

கண்டறியப்பட்ட சேர்வைகளிடையே அனைத்து தென்னை இரகங்களிலும் குளோரோஜெனிக் அமிலம் பிரதானமாக இடம்பெற்றிருந்தது. வெண்ணிலிக் அமிலத்தை அடுத்து எலாஜிக் அமிலம் இரண்டாவது மிகுதியான பினோலிக் சேர்க்கையாக காணப்பட்டது. வெண்ணிலிக் அமிலத்தை அடுத்து காலிக் அமிலம் மற்றும் கா.்பிக் அமிலம் ஆகியன மிகுதியான பினோலிக் சேர்க்கையாக காணப்பட்டன. p - கூமரிக் அமிலம், வெண்ணிலிக் அமிலம், எபிகலோகேடேசின் கலேற்று, குவெர்செடின் மற்றும் ருடின் ஆகியன அனைத்து தென்னை இரகங்களிலும் காணப்பட்ட ஏனைய கூறுகளாகும்.

மிதமான மற்றும் நடுத்தரமான அல்சைமர் நோயினை குணமாக்குவதில் தூய தேங்காய் எண்ணெயின் விளைவு

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் களனி பல்கலைக் கழக மருத்துவ பீடம்

மிதமான மற்றும் நடுத்தரமான அல்சைமர் நோயாளிகள் நினைவு மற்றும் அறிவாற்றலில் தூய தேங்காய் எண்ணெயின் விளைவினை ஆராய்வதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. இரட்டை மருந்துப்போலி ஆளுகை சோதனையின் கீழ் 120 மிதமானது

முதல் நடுத்தர அளவிலான அல்சைமர் நோயாளிகளின் (MMSE=15-25) எழுந்தமாறான பரிகரிப்புக்குட்படுத்தப்பட்ட (நாளொன்றுக்கு 30 மி.லீற்றர் தூய தேங்காய் எண்ணெய் பருகச் செய்யப்பட்டது.) மற்றும் ஆளுகை குழுவொன்றை (நாளொன்றுக்கு 30 மி.லீற்றர் கனோலா எண்ணெய் பருகச் செய்யப்பட்டது.) இந்த ஆய்வு உள்ளடக்குகிறது. இந்த ஆய்வு களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்பட்டு இரு குழுக்களிடையேயும் நினைவு மதிப்பெண், கொழுப்பு சோதனை மற்றும் HbA1c அளவுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபாடுகள் காணப்படவில்லை என வெளியிடப்பட்டது. எனினும் தூய தேங்காய் எண்ணெய் பருகிய APOE 4 காவிகளின் MMSE புள்ளிகள், காவி அல்லாதவர்களுடன் ஒப்பிடும் போது விருத்தியடைந்து காணப்பட்டன. அதே சமயத்தில் கனோலா எண்ணெய் பருகிய நோயாளிகளின் நினைவாற்றல் புள்ளிகளில் APOE 4 நிலை செல்வாக்குச் செலுத்தவில்லை. மேலும் கனோலா எண்ணையுடன் ஒப்பிடும் போது தூய தேங்காய் எண்ணெய் கொலஸ்ரோல் அல்லது ரைகிளிசெரைட்டினை அதிகரிக்கவில்லை என ஆய்வு காட்டுகிறது.

தூய தேங்காய் எண்ணெய் அல்லது சோயா எண்ணெயை பருகச் செய்தவதன் மூலம் நீரிழிவு தூண்டப்பட்ட எலிகளுடன் ஒப்பிடும் போது நீரிழிவு அல்லாத எலிகளில் குளுகோஸ் ஏற்கும் தன்மையினை மேம்படுத்தல்

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடம்

நீரிழிவானது நாள்பட்ட நோயொன்றாகும். இது முழுமையான இன்சுலீன் குறைவினால் அல்லது இன்சுலீனின் செயற்பாட்டு குறைவினால் ஏற்படுகிறது. இதனை ஆக உயர் இரத்த குளுக்கோஸினால் (ஹைப்பர் கிளைசீமியா) வகைப்படுத்தப்படுகிறது. நீரிழிவு கொண்ட நீரிழிவு அற்ற எலிகளில் குளுக்கோஸ் ஏற்புத்திறனில் தூய தேங்காய் எண்ணெய் அல்லது சோயா எண்ணையின் தாக்கத்தினை தெளிவுபடுத்துவதை இந்த ஆய்வு நோக்காகக் கொண்டது. எழுந்தமாறாக தெரிவு செய்யப்பட்ட ஸ்ப்ராக் டாவ்லி எலிகளின் (n=8 ஒவ்வொன்றும் வயது 6-8 வாரங்கள் 150-200 கிராம்) மூன்று குழுக்கள் நீரிழிவு அற்ற குழுவிற்கும் அலோக்சேன் கொண்டு நீரிழிவு நிலைக்கு தூண்டப்பட்ட மூன்று குழுக்கள் நீரிழிவு கொண்ட குழுவுக்கும் பிரிக்கப்பட்டன. ஓவ்வொரு பிரிவிலும் உள்ள மூன்று குழுக்களுக்கும் நீர், தூய தேங்காய் எண்ணெய் அல்லது சோயா எண்ணெய் ஆகியன நாளொன்றுக்கு உடல் நிறையின் 1 கிலோகிராமிற்கு 7.5 மி. லீற்றர் என்ற வீதம் 90 நாட்களுக்கு பருகச் செய்யப்பட்டது. நீரிழிவு கொண்ட குழுவின் வாய் வழியான குளுக்கோஸ் ஏற்புத்திறன் சோதனையில் (OGTT) பாரிய வேறுபாடு காணப்படவில்லை. நீரிழிவு அற்ற குழுவில் நீர் மற்றும் எண்ணெய் பருக்கப்பட்ட குழுக்களில் பாரிய வேறுபாடு காணப்பட்டது.($p<0.001$) இன்சுலின் உள்ள போது தூய தேங்காய் எண்ணெய் மற்றும் சோயா எண்ணெய் ஆகியன குளுக்கோஸ் ஏற்புத்திறனை மேம்படுத்தும் திறன் கொண்டதாக முடிவுகள் காட்டுகின்றன. இன்சுலீன் இல்லாத போது குளுக்கோஸ் ஏற்புத்திறனை மேம்படுத்துவதில்லை.

தலையணை / மெத்தைக்கான தும்பு - இறப்பர் சேர்க்கை

தெங்கு பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

தும்பு கொண்ட தலையணை மற்றும் மெத்தைக்காக பொருத்தமான தும்பு நார் வகையினை கண்டறிவதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. 80kg/m³ அடர்த்தியுடைய 100% ஓமட் (Omat) நார் இலங்கை தர நிர்ணய நியமங்களின் நெருக்கல், உள்தள்ளல் விறைப்புத்தன்மை (N), தோற்றம் மாறுவதற்கான ஆன தடை (சதவீதம்) ஆகியனவற்றை திருப்திப்படுத்துவதற்காகவும் மெத்தை உற்பத்திக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதுமாகும். 47 x 40 x 11cm³ அளவான தலையணை தயாரிப்புக்காக மெத்தை மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. கட்டுப்பாட்டு சோதனை உடனான மனிதர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதான சிறந்த தலையணைக்காக ஓமட் அல்லது மெத்தை தும்பிலிருந்து தயாரிக்கப்பட்ட மாதிரிகள் சோதிக்கப்பட்டன. ஒரே சூத்திரத்தை பயன்படுத்தி தலையணை மாதிரிகள் உருவாக்கப்பட்டன.

ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மையானது 12 நபர்களை கொண்ட குழுவொன்றினால் 6 மாத காலப்பகுதியில் நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் தலையணையில் அமரச்செய்வதன் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. சோதனை பரமானங்களாவன "அமர்வதில் சௌகரிகம்" மற்றும் "தசைக்கு சௌகரிகம் உணரப்படல்" ஆகியனவும் தும்பினால் தயாரிக்கப்பட்ட மெத்தையுடன் ஒப்பிடும் போது ஓமட் இனை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட தலையணை குறிப்பிடத்தக்களவு உயர் விருப்புக் கொண்டதாக ($p<0.05$) கண்டறியப்பட்டது. "அமர்ந்திருக்கும் பொழுது வெப்பநிலை அதிகரித்தல்", "மெத்தையிலிருந்து வெளியேறுகின்ற நச்சு வாயு காரணமாக சுவாசிப்பதில் சிரமம்" மற்றும் "வெப்பநிலை அதிகரிப்பினால் வியர்த்தல்" ஆகிய பரமானங்களில் குறிப்பிடத்தக்க எந்தவொரு வேறுபாடுகளும் காணப்படவில்லை. இந்த முடிவுகளில் இருந்து ஓமட் நாரில் (100%) இருந்து தயாரிக்கப்பட்ட தலையணை உயர்ந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் இது உயர்ந்த தரமான தலையணை உற்பத்திக்கு பரிந்துரைக்கப்பட முடியும்.

பொச்சு மட்டை ஊற விடப்படும் முறையினை மதிப்பிடல்

தென்னை பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

பொறிமுறை பிரித்தெடுப்புக்கு முன் பொச்சு மட்டையிலுள்ள தும்பு இழகும் வரை சுமார் 3 மாத காலத்திற்கு மட்டைகள் நீரில் ஊற விடப்படுவது அவசியமானதாக உள்ளதால் தும்பு உற்பத்திக்கு நீண்டகாலம் எடுக்கிறது. வழக்கமாக பொச்சு மட்டைகளை ஊற வைப்பதற்காக இயற்கையாக ஊற விடக்கூடிய குழிகளை தும்பு கைத்தொழிற்துறை பயன்படுத்துகிறது. ஊற விடப்படுகின்ற திரவமானது நிலத்தடி நீரில் சேர்வதனால் நீர் மாசுறுவது, நனைய விடப்படுகின்ற குழிகளில் இருந்து நீரில் நனைந்த மட்டைகளை அகற்றப்படுவது கடினம், ஊழியர் பற்றாக்குறை ஆகியன இயற்கையாக ஊற விடப்படுவதிலுள்ள குறைபாடுகளாகும். மட்டைகளை ஊற விடுவதற்காக இயற்கையான குழிகளுக்கு பதிலாக கொங்கிரீட் தொட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இரு வேறு முறைகளில் ஊற விடப்பட்ட பொச்சு மட்டைகளின் தும்பு பிரித்தெடுப்புத் திறனை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது.

கொங்கிரீட் நனையல் தொட்டி முறையில் 4 முதல் 12 வார காலப்பகுதியில் மின் கடத்துதிறன் 702 ± 8.05µs இலிருந்து 781 ± 23µs ஆக அதிகரிப்பதாக ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

இயற்கையான ஊறவிடல் முறையில் 4 முதல் 12 வாரங்களில் மின் கடத்துதிறன் 716 ± 6µs இலிருந்து 812± 9µs ஆக அதிகரிக்கின்றது. இரு நனையல் தொட்டிகளிலும் சிறியளவிலான pH மாற்றம் அவதானிக்கப்பட்டது. நுண்ணங்கிகளின் எண்ணிக்கையும் ஊற விடப்படுகின்ற காலப்பகுதியுடன் மாறுபட்டு காணப்பட்டது. 3 மாதங்கள் வரை ஊற விடப்பட்ட பொச்சு மட்டைகளில் இருந்து உயர் அளவான தும்பு நார் பெறப்பட்டது. கொங்கிரீட் தொட்டி முறை மற்றும் இயற்கையான ஊறவிடல் குழி முறை ஆகியன முறையே 9.48 ± 1.75 % மற்றும் 9.11 ± 1.12% ஆகும். இந்த இரு முறைகளிலுமான தும்பு நாரின் அளவில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு எதுவும் அவதானிக்கப்படவில்லை. எனவே பொச்சு மட்டைகளை ஊற வைப்பதற்காக இயற்கையான பொச்சு மட்டை ஊறவிடல் குழிகளுக்கு பதிலாக கொங்கிரீட் தொட்டி முறை பரிந்துரைக்கப்பட முடியும்.

தேங்காய் நார் இடப்பட்ட சௌகரியமான கையுறைகள் மற்றும் இறப்பர் காலணிகள் உருவாக்கம்

தென்னை பதனீட்டு ஆராய்ச்சிப் பிரிவு

இயற்கை இறப்பருடன் சேர்ந்த தேங்காய் நார் கலந்த சேர்க்கை மிகவும் இலேசானதாகவும், நீர் உட்புகாத்தன்மை கொண்டதாகவும் குறைந்த வெப்பக் கடத்துதிறன் கொண்டிருப்பதனால் இவை மிகவும் பிரசித்தமாகவுள்ளன. உடலுக்கு சௌகரிகமானதும் பாதுகாப்பானதுமான பாதணிகள் மற்றும் கையுறைகள் ஆகியனவற்றை தும்பு மற்றும் இயற்கை இறப்பர் கலந்து மிகக் குறைந்த வியர்க்கும் தன்மை கொண்டதாகவும் இலகு நிறை உடையதாகவும் தயாரித்தல் அவசியமானதாகும்.

இறப்பர் பாதணிகள் மற்றும் கையுறைகளில் உருவாகின்ற வெப்பம் காரணமாக ஏற்படும் வியர்க்கும் தன்மையினை இழிவளவாக்க தும்பு நாரிற்கு பெறுமதி சேர்ப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். பொருத்தமான நீள அளவினை ஆராய்வதற்காக தும்பு-இறப்பர் சேர்க்கையினை தயாரிக்க வேறுபட்ட நீளங்களான 0-0.5 மி.மீற்றர் மற்றும் 0.5-1 மி.மீற்றர் நீளம் கொண்ட தும்பு நார் பயன்படுத்தப்பட்டது. 40% (w/w) இற்கு பதிலாக 0-0.5 மி.மீற்றர் நீளமான தும்பு பயன்படுத்தப்பட்ட போது உயர் நீட்சி வலிமையினை (13 ± 1MPa) வழங்கியதாக முடிவுகள் வெளிப்படுத்தின.



தேங்காய் திண்ம வித்தகவிழையம், தும்பு மற்றும் ஏனைய உற்பத்தி பொருட்கள் சார்ந்த துறையினது செயல்திறன்

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

சமூகத்திற்கு பல்வேறு உள்ளீடுகளை வழங்கும் தென்னையானது குறித்தளவிலான வருமானத்தை அளிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் பிரதான பங்களிப்பினை வழங்கும் கூறாகத் விளங்குகிறது. 2021 ஆம் ஆண்டு தெங்கு தொழில்துறை மிக உயர் அளவிலான தேங்காய் உற்பத்தியான 3382.9 மில்லியன் தேங்காய்களை பதிவு செய்தது. 2019 இன் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது (3106.4 மில்லியன்) 20% ஆல் அதிகரிப்பாக காணப்படுவதுடன் அதியுயர் அந்நிய செலாவணியான ரூ.166 பில்லியன் (834 மில்லியன் அமெரிக்க டொலர்) ஈட்டியுள்ளது. இவை தெங்கு வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். ஆண்டு முழுவதும் தென்னை வளரும் பிரதேசங்களில் மழைவீழ்ச்சிக் கோலமானது தேங்காய் உற்பத்திக்கு சாதகமாக அமைந்தது.

2020 ஆம் ஆண்டில் 19,759 மெற்றிக் தொன்னாக காணப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 43,038 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 117% வளர்ச்சியாக காணப்படுகிறது. தேங்காய்ப் பாலின் ஏற்றுமதி கடந்த ஆண்டின் அளவினை (46,626 மெற்றிக் தொன்) விட 14% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தூய தேங்காய் எண்ணெய் உற்பத்தியானது ஒட்டு மொத்தமாக 3% வளர்ச்சியினையும் உலர்த்திய தேங்காயின் உற்பத்தி 22% வளர்ச்சியினையும் கொண்டிருக்கிறது. தேங்காய் திண்ம வித்தகவிழைய உற்பத்திகள் இடையே உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் பால் ஆகியன முறையே 107.85 அமெ. டொலர் மற்றும் 102.94 அமெ. டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டித் தருவதில் அதிகளவு பங்களிப்புச் செய்கின்றன. உலர்த்திய தேங்காயின் விலை வருடம் முழுவதிலும் சாதகமான நிலையில் பேணப்பட்டதுடன் உள்நாட்டு தேங்காய் எண்ணெயின் விலையும் வருடம் முழுவதும் சாதமான நிலையிலேயே காணப்பட்டது. தெங்குச் செய்கையாளர்கள், கைத்தொழிற்துறை மற்றும் நுகர்வோருக்கான நியாயமான விலையினை பேணுவதில் பொது தொழிற்துறை சங்கம், தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அமைச்சு ஆகியோரது தலையீடே இதற்கு காரணமாகும். மேலதிகமாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பரிந்துரையுடனான விஷேட சரக்கு வரி ஆண்டு முழுவதும் ஒரே அளவாக பேணப்பட்டமையானது இந்த விலைகளை தொடர்வதற்கு உறுதுணையாக அமைந்தது. இவ்வாறு காணப்பட்ட போதிலும் கொப்பறாவின் ஏற்றுமதியானது 23% மறை பெறுமான வளர்ச்சியினை காட்டியது.

இந்த ஆண்டில் சிரட்டை சார் உற்பத்தி பொருட்கள் மற்றும் தும்பு முடிவுப் பொருட்கள் ஆகியவற்றால் பெறப்பட்ட ஏற்றுமதி வருமானம் முறையே 42% மற்றும் 33% என்ற துரிதமான அதிகரிப்பினை கொண்டிருந்தன. தும்பு முடிவுப் பொருள் உற்பத்திப் பிரிவின் கீழ் ஏற்றுமதிகளில்

அச்சில் வார்க்கப்பட்ட தும்பு உற்பத்திகள் ஏற்றுமதி வருவாயில் உயர்ந்தளவு பங்களிப்பினை வழங்கியது.

சமையல் எண்ணை ஏற்றுமதி முதல் அரையாண்டில் அதிகரித்து காணப்பட்ட போதிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இரண்டாம் அரையாண்டில் 30% ஆல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஆனால் ஒட்டு மொத்தமாக சமையல் எண்ணெயின் ஏற்றுமதி 219,295 மெற்றின் தொன் இருந்து 202,269 மெற்றிக் தொன்னாக குறைடைந்து 8% வீழ்ச்சியினையே காட்டுகிறது. அதே சமயத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதி கிரயம் 52% ஆல் அதிகரித்திருக்கிறது.

விலை எதிர்வுகூறல் மாதிரியொன்றினை உருவாக்குவதற்கான தேங்காய் விலை களின் மாதிரியாக்கம்

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு மற்றும் தாவர உடற்றொழியியல் பிரிவு

கடந்த தசாப்தத்திற்கு மேல் தெங்கு மற்றும் தெங்கு சார் உற்பத்தி பொருட்களுக்கான சர்வதேச வழங்கல் மற்றும் அவற்றுக்கான கேள்வி என்பன பாரியளவில் அதிகரித்துள்ளது. இதனால் உற்பத்தி இடம்பெறுகின்ற நாடுகளின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாளர்களில் ஒருவராக இந்த கைத்தொழில் துறை விளங்குகிறது. ஏனைய விவசாய தொழிற்துறையினை ஒத்ததாக தெங்கு துறையும் விலைத் தளம்பல்களை எதிர்கொள்கிறது. நம்பகமான விலை மாதிரி மற்றும் எதிர்வுகூறல் நுட்பங்கள் ஆகியன பெறுமதி சங்கிலி காரணிகள் மீதான சுமையினை எளிதாக்குகின்றன.

2009 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் புத்தளம், குருணாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்தியங்களின் தேங்காய்களினது பண்ணை விலையின் மாதாந்த சராசரி, வெளியீட்டு மாறியாகவும் முதல் இரண்டு பின்தங்கிய தேங்காய் உற்பத்தி மற்றும் பண்ணை விலை ஆகியன வகைப்படுத்தப்பட்ட மாறிகளாகவும் பயன்படுத்தப்படுவதற்கு முன் ஊட்ட நரம்பியல் வலையமைப்பு மாதிரியானது பொருந்துகிறது.

இரு மாதங்களுக்கு முன்னரான தேங்காயின் பண்ணை விலைக்கான எதிர்வு கூறல் சிறந்த துல்லியத்தன்மையினை முடிவுகள் காட்டின. பயிற்சி, செல்லுபடியாக்கம், சோதனை ஆகியனவற்றின் மாதிரிகளின் துல்லியத்தன்மையின் R பெறுமானம் முறையே 0.97, 0.96 மற்றும் 0.97 ஆகும். 2021 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கான பண்ணை விலைகள் இரு மாதங்களுக்கு ஒரு தடவை ஜனவரி/ பெப்ரவரியில் ரூ.65.94 ஆகவும் மார்ச்/ ஏப்ரல் இல் ரூ.61.4 ஆகவும் வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தி எதிர்வு கூறலை பயன்படுத்தி எதிர்வு கூறப்பட்டது.

இலங்கை நுகர்வோரின் வீட்டு உபயோகத்திற்கான தேங்காய் மற்றும் சமையல் எண்ணெயின் நுகர்வின் போக்கு

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

இலங்கையிலுள்ள வீடுகளில் உணவு பயன்பாட்டு முறை கடந்த சில தசாப்தங்களாக படிப்படியாக மாற்றமடைந்து வருகிறது. அதனை சமையல் எண்ணை சந்தையில் பல்வேறுபட்ட பிரதியீட்டுப் பொருட்களின் அறிமுகத்தின் மூலம் அவதானிக்கலாம். இது பொருளாதார மற்றும் மக்கள் தொகை காரணிகள் மட்டுமன்றி நுகர்வோரின் சுவை மற்றும் விருப்பம் ஆகியவற்றின் தாக்கத்தினால் ஏற்பட்ட வாழ்க்கை முறை மாற்றங்களால் இயக்கப்படுகிறது.

நகர மற்றும் கிராமப்புறத்திலுள்ள வீடுகள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்பட்டன. தோட்ட வீடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட உள்ளன. மதிப்பீட்டின் படி நகர மற்றும் கிராமப்புற வீடுகளில் பெரும்பான்மையாக தேங்காய் எண்ணெய் சமையல் தேவைகளுக்காக பயன்படுவதுடன் 2% ஆனோரால் மாத்திரமே தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகிறது. கிராமப்புற வீடுகள் அதிகமாக வீட்டில் தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெயில் சார்ந்திருப்பதுடன் நகர வீடுகளில் ஒரு பெரும் பகுதி உள்நாட்டு வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்பவையாகவும் உள்ளன. வீடுகளில் சமையலுக்கான எண்ணெயினை தெரிவு செய்வதில் அவற்றின் கிடைக்கப் பெறுகின்ற தன்மை வலுவான காரணியாகவும் அவற்றின் விலை அடுத்தும் காணப்படுகிறது. தேங்காய் எண்ணையினை நுகர்கின்ற வீடுகளில் மிக அதிகமானோர் 1-2 லீற்றரினை மாதாந்தம் நுகர்வதுடன் 29% ஆனோரும் மாதாந்தம் 2-4 லீற்றரினையும் 10% இற்கு அதிகமானோர் மாதாந்தம் 3 லீற்றரினையும் நுகர்கின்றனர். கிராமப்புற வீடுகளில் நாளாந்தம் குறைந்தது 2 வேளை உணவில் தேங்காய் எண்ணெய் உள்ளடக்கப்படும் அதேசமயம் நகர் புற வீடுகளில் நாளாந்தம் ஒரு வேளை உணவில் தேங்காய் எண்ணெய் உள்ளடக்கப்படுகிறது. ஆனால் 45% ஆன வீடுகளில் ஆரோக்கியத்தின் மீதான அக்கறை காரணமாக எண்ணெய் உள்ளடக்கப்பட்ட உணவுகளின் எண்ணிக்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளனர்.

6% ஆன வீடுகளில் மாத்திரம் கடந்த வருடத்தில் பயன்படுத்தி வந்த சமையல் எண்ணையினை சமீபத்தில் மாற்றியுள்ளனர். பெரும்பாலானோர் தேங்காய் எண்ணெயிலிருந்து பாம் எண்ணெய்க்கு மாற காரணம் தேங்காய் எண்ணெய் கிடைக்கப்பெறாமையே ஆகும்.

ஏசிரியா சிற்றுண்ணியினைக் கட்டுப்படுத்த விடுவிக்கப்படுகின்ற இரைகௌவி சிற்றுண்ணி தாக்கத்தின் மதிப்பீடு (2019 – 2021)

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

விவசாய கள நிலையில் ஏசிரியா சிற்றுண்ணியை கட்டுப்படுத்துவதற்காக விடுவிக்கப்படுகின்ற இரைகௌவி சிற்றுண்ணியின் திறனை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு நடாத்தப்பட்டது. இரைகௌவி சிற்றுண்ணிகளை தமது சொந்த ஆய்வுகூடங்களில் இனம் பெருக்குகின்ற வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் ஒன்றிணைந்து இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் படி 2 ஆண்டுகளுக்கு சிற்றுண்ணி பயன்பாடு தொடரப்பட்டது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான தேங்காய் உற்பத்தி தரவுகள் ஒப்பிடப்பட்டன. 2019 மற்றும் 2020 ஆம்

ஆண்டுகளில் மாதாந்தம் சராசரியாக சிற்றுண்ணி தாக்கத்திற்கு உட்பட்ட காய்களின் எண்ணிக்கைகள் முறையே 4.76 மற்றும் 3.62 ஆகும். இது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியேயாகும் (P< 0.05). மேலதிகமாக ஒவ்வொரு மரத்திலும் முழுமையான விலை கொண்ட காய்களின் எண்ணிக்கையில் சிற்றுண்ணிப் பாதிப்புக்குள்ளான காய்களின் எண்ணிக்கை 3.5 இலிருந்து 2.5 ஆக குறைவடைந்துள்ளது. இரைகௌவி சிற்றுண்ணி விடுவிப்பின் எஞ்சிய தாக்கத்தினை ஆராய்வதற்காக ஆய்வு தொடரப்படுகிறது.

இலங்கையின் தென்னை மீள்நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியத்தினை மதிப்பிடல்

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

இலங்கையின் தெங்குத் துறையின் பேண்தகு தன்மையினை ஏற்படுத்துவதை நோக்காக கொண்ட தேசிய மீள் நடுகை நிகழ்ச்சி திட்டத்திற்கு ஆதரவாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து தென்னை பயிர்ச்செய்கை சபையினால் வருடாந்தம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் எதிர்காலத் தெங்குத் துறையின் வழங்கலுக்கு கள நிலையிலுள்ள கன்றுகள் எந்தளவு வெற்றிகரமாக உள்ளது என்பதனை விளங்கிக் கொள்வதற்கு மீள்நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் குறுக்கு மதிப்பீடுகள் எதுவும் இடம்பெறவில்லை. 2015 முதல் இலங்கையிலுள்ள தென்னங்கன்றுகளின் தற்போதைய நிலையினை மதிப்பிடுவதன் மூலம் தேசிய மீள் நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் இடைவெளிகளை புரிந்து கொள்வதற்கும் தென்னை மீள் நடுகை நிகழ்ச்சியின் செயல்திறன், கள நிலையில் கன்றுகளின் இறப்பு வீதம், கன்றுகள் இறப்பதற்கான மூலகாரணங்கள் மற்றும் தொழினுட்பம் பரப்பப்படுவதிலுள்ள இடைவெளிகள் ஆகியவற்றினை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டத்தின் தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்தியங்களின் 360 தோட்டங்களில் 2014 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட தென்னங்கன்றுகளை கொண்டு ஆய்வொன்று நடாத்தப்பட்டது. இதன் படி 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கன்றுகளின் இறப்பு வீதம் முறையே 27%, 23%, 29%, மற்றும் 40% ஆகும். வறட்சி (14 - 51%), கருவண்டு (15 - 39%), சிவப்பு வண்டு (11 - 21%), முள்ளம் பன்றி (13 - 39%) ஆகிய பாதிப்புக் காரணிகள் நான்குமே இந்த நான்கு வருடங்களிலும் 80% இற்கும் அதிகமாக இறப்பு வீதம் ஏற்பட்டமைக்கான பிரதான காரணங்களாகும். அனைத்து தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்தியங்களிலும் தரவு சேகரிப்பு நிறைவு செய்யப்பட்ட பின்னர் விரிவான பகுப்பாய்வு செய்யப்படும்.

தும்பு நார் உற்பத்தி துறையின் தொழில்துறை அமைவு மற்றும் சந்தை நகர்வு (2019- 2021)

விவசாய பொருளியல் மற்றும் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவு

தும்பு தொழிற்துறைக்கான தேசிய கொள்கை ஒன்று உருவாக்கப்படுவதற்கான உடனடி தேவைப்பாடு ஏற்கனவே பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் அடையாளம் காணப்பட்டது. எனவே தும்பு நார் கைத்தொழில் துறைக்கான தேசிய கொள்கை ஒன்றினை உருவாக்குவதற்கான பரிந்துரைகள் பெறுவதே இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாகும். சர்வதேச சந்தையின் வரலாற்று போக்கினை கண்டறிவது பிரத்தியேகமான குறிக்கோளாகும். 1980 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் இலங்கையின் வகிபாகம் 70% ஆன உயர்ந்த அளவில் காணப்பட்டதுடன் 2000 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 40% ஆக வீழ்ச்சியடைந்தது. எனினும் கடந்த தசாப்த காலப்பகுதியில் இலங்கையினால் சர்வதேச சந்தையில் தனது வகிபாகத்தினை 45% இற்கும் மேல் அதிகரிக்கக்கூடியதான இருந்தது. தும்பு நார் கைத்தொழில் துறையின் மதிப்பு சங்கிலியினை அடையாளம் காண்பதற்காகவும் ஆய்வு செய்வதற்காகவும் தும்பு நாரின் பெறுமதி சேர்ப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளம் காண்பதற்காவும் ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கொவிட்-19 நோய்ப்பரவல் நிலை காரணமாக இந்த ஆய்வினை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் தரவுப் பகுப்பாய்வு தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

விருத்தி செய்யப்படுகின்ற ஆய்வுகள்

பண்ணை அமைப்பின் செயல் விளக்கங்கள்

பயிராக்கவியல் பிரிவு

i. உயிர்ச் சக்தி உற்பத்தி

இரத்மலாகார தோட்டத்தின் ஒரு ஹெக்டயர் தென்னந்தோட்டத்தில் 150 தென்னை மரங்கள், 2500 சீமைக்கிழுவை (கிளிசீரியா) மரங்கள் மற்றும் வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட வைக்கோலினை உணவாக உட்கொள்கின்ற 6 எருமைகள் ஆகியனவற்றை கொண்ட உயிர்ச் சக்தி பிறப்பாக்க மாதிரி அமைப்பொன்று பராமரிக்கப்பட்டது. இந்த அமைப்பில் சீமைக்கிழுவை (கிளிசீரியா) மரமானது வாயு உற்பத்திக்காகவும் எருமை சாணமானது உயிர் வாயு உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்பட்டதுடன் உயிர் வாயு உற்பத்தியின் கழிவுகள் தென்னை மரங்களுக்கு இடப்பட்டன. தெங்கு தொடர்பில் அக்கறையுடையவர்களுக்கு தகவல்களை பரப்புவதற்காக இந்த மாதிரி அமைப்பு பயன்படுத்தப்படுகிறது.




உரு 1. இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கிளிரிசிடியா பயிர்செய்கை மற்றும் உயிர் சக்தி உற்பத்தி பிரிவு

ii. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு

தென்னை மரங்களின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட கால்நடை வளர்ப்பினூடாக சிறிய அளவிலான விவசாயிகளின் இலாபத்தினை அதிகரிப்பதை நோக்காக கொண்டு இரத்மலாகார தோட்டத்தில் தென்னை மரங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஆடு மற்றும் செம்மறியாடு ஆகியனவற்றின் விவசாய முறைமைகளின் செயல்முறை விளக்கமானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இரு விவசாய முறைமைகளும் களையினை கட்டுப்படுத்துகின்ற சிக்கலுக்கும் தென்னந்தோட்ட மண்ணின் பசளையின் அளவினை விருத்தி செய்வதற்கும் வினைதிறனாக





உரு 2. இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஆடு மற்றும் செம்மறியாடு பண்ணையின் செயல்முறை விளக்கங்கள்

காணப்படுகிறது. கட்டற்ற மேய்ச்சல் நிலங்கள் மற்றும் CO3 புற்றரைகள் ஆகியவற்றுடன் 50 இற்கு மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இந்த மாதிரியானது பல தெங்கு தொடர்பில் அக்கறையுடையவர்களுக்கான தொழினுட்ப பரிமாற்றல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

iii. மேய்ச்சல் நிலம் மற்றும் தீவனம் ஆகியனவற்றின் செயன்முறை விளக்கங்கள்


உள்ளூர் சமூகம், தெங்குச் செய்கையாளர்கள், பல்கலைகழக, விவசாயக் கல்லூரி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தென்னந்தோட்டக் காணிகளில் இடம்பெறுகின்ற கால்நடை முகாமைத்துவம் தொடர்பிலான அறிவினை மேம்படுத்துவதற்கும், விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான தீவனம், புல் தரை மற்றும் மூடு பயிர்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய இரு கள மேய்ச்சல் நிலங்கள் மற்றும் தீவன செயன்முறை விளக்கங்கள் ஆகியன இரத்மலாகார மற்றும் பண்டிரிப்புவ தோட்டங்களில் உருவாக்கப்பட்டன.





உரு. 3. இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திலுள்ள மண்புழு உரமாக்கல் செயல்முறை விளக்கம்

iv. மண்புழு உரத் தயாரிப்பு





உரு 4. இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திலுள்ள மண்புழு உரமாக்கல் செயல்முறை விளக்கம்

இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்தின் மண்புழு உர உற்பத்தி பிரிவானது பொதுவாக கிடைக்கப் பெறுகின்ற உயிர்த் திணிவுக் கழிவுகள், பயிர், விலங்குகளின் எச்சங்கள் ஆகியனவற்றை கொண்டு குறுகிய காலப்பகுதியினுள் போஷணை செறிவுடைய கூட்டுரத்தினை தயாரிப்பதற்காக பராமரிக்கப்பட்டது. புழுக்களின் எண்ணிக்கையினை பெருக்குவதற்காகவும் ஆராய்ச்சி மற்றும் செயன்முறை விளக்க நோக்கத்திற்காகவும் மண்புழு உர தயாரிப்புச்

செயன்முறை தொடரப்பட்டது. சில தென்னை செய்கையாளரிடையே மண்புழுக்கள் பகிரப்பட்டதுடன் இந்த அலகானது விவசாயிகள், பல்கலைகழக, விவசாய கல்லூரிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான செயன்முறை விளக்க மாதிரியாகவும் பயன்படுத்தப்பட்டது.

v. ஊடுபயிர் செயன்முறை விளக்கங்கள்

உள்நாட்டு சமூகம், தெங்குச் செய்கையாளர்கள், பல்கலைக்கழக, விவசாயக் கல்லூரி மற்றும் பாடசாலை மாணவர்கள் இடையே தென்னந்தோட்டத்தில் ஊடுபயிர் செய்கை மேற்கொள்வது தொடர்பிலான அறிவினை பரப்புவதோடு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்காக கொண்டு மாகந்துர மற்றும் இரத்மலாகார ஆராய்ச்சி நிலையங்களில் விவசாய ஏற்றுமதிகள், பழங்கள், வெட்டு மரங்கள், தீவனம் மற்றும் கிழங்குப் பயிர்கள் ஆகியன உள்ளடங்களாக 20 க்கும் மேற்பட்ட ஊடுபயிர்களின் மாதிரிகள் பராமரிக்கப்பட்டன.





உரு 5. மாகந்துர மற்றும் இரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஊடுபயிர் செயல்முறை விளக்கம்

ஈர - இடை வெப்ப வலயத்தில் கலப்பின தென்னை உற்பத்திக்காக புதிய தென்னை விதைத் தோட்டமொன்றின் ஸ்தாபிப்பு


மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவு

கலப்பின தென்னையானது முந்திய பூவுருவாகத்தினையும், ஒப்பீட்டளவில் நெட்டை இனங்களை விட 40-50% இற்கு அதிகமான விளைச்சல் உற்பத்தியினையும் கொண்டுள்ளது. ஆகவே கலப்பின தென்னைப் பயிர்ச்செய்கையானது தேசிய அளவிலான தேங்காய் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான ஒரே வழியாக காணப்படுகிறது. ஆனால் தற்போது கலப்பின விதைத் தேங்காய்களின் உற்பத்தி மிகக் குறைவாக காணப்படுவதுடன் ஆண்டின் மொத்த விதைத் தேங்காய் உற்பத்தியில் இதன் பங்களிப்பு 2% ஆக மாத்திரமே காணப்படுகிறது. பரிந்துரைக்கப்பட்ட கலப்பின தென்னை இரகங்களில் CRIC65 இனமானது வழிப்படுத்தப்பட்ட மகரந்த சேர்க்கை மூலம் அம்பகலேயிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட விதை தோட்டத்திலும் ஏனைய கலப்பின இரகங்கள் குறிப்பிடத்தக்க அளவுகளில் தென்னை ஆராய்ச்சி நிறுவன தோட்டங்களில் கை மூலமான மகரந்த சேர்க்கை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆகையால் கப்சுவய கலப்பின விதைத் தேங்காய் உற்பத்திக்காக விதைத் தோட்டமொன்றை நிறுவுவதற்காக வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்ட கம்பனியுடன் ஒன்றிணைந்த அபிவிருத்தி செயற்றிட்டமொன்று தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டது. இந்த செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்கான நிதி 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் ஊடாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்றது. விதைத் தோட்ட நிர்மாணம், பராமரிப்பு ஆகியனவற்றுக்கு உதவி புரிவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம், வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்ட கம்பனி ஆகியவற்றிற்கிடையில்

22.10.2021 அன்று கைச்சாத்திடப்பட்டது.

விதைத் தோட்டம் அமைப்பதற்காக குருணாகல் பிரதேச தோட்டத்தின் கார்ல்ஸ்.ீ. பீல்ட் பிரிவிலிருந்து 75 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டதுடன் 4,500 இற்கும் மேற்பட்ட நாற்றுக்கள் தாய்த் தாவரங்களுக்காக நடுகை செய்யப்படவுள்ளன. தாய்த் தாவரங்களில் பயன் கிடைக்க ஆரம்பித்ததும் விதைத் தோட்டத்தின் கப்சுவய விதைகளின் உற்பத்தி அளவு கிட்டத்தட்ட 200,000 ஆக காணப்படும். 2021 ஆம் ஆண்டில் விதைத் தோட்டத்தினை சுற்றி வேலி அமைக்கப்படுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உப நீர்ப்பாசன அமைப்பொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. 650 நாற்றுகள் நடுகை செய்வதற்கான நில ஆயத்த பணிகள் நிறைவு செய்யப்பட்டன. ஆனால் 2021 இன் பெரும் போகத்தின் கடும் மழை காரணமாக நடுகை மேற்கொள்ளப்பட முடியவில்லை.



குருணாகல் பிரதேச தோட்டத்தின் கார்ல்ஸ்.ீ.பீல்ட் பிரிவில் புதிய விதைத் தோட்டம் அமைக்கப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி ஆகியவற்றுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட போது

கினியாம விதைத் தோட்டத்தினை மேம்படுத்தல்

மரபியல் மற்றும் தாவர இனவிருத்திப் பிரிவு

அதிகூடிய விளைச்சலினை தரக்கூடிய கப்றுவன கலப்பின விதை தேங்காய்களை உற்பத்தி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட சிலாப பெருந்தோட்டக் கம்பனியுடனான அரசு-அரசு பங்குடைமையாக கினியாம விதைத் தோட்டம் 2013 ஆம் ஆண்டு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மரபியல் மற்றும் தாவர இனவிருத்தி பிரிவினால் உருவாக்கப்பட்டது.


விதைத் தோட்டத்தினை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூ. 8 மில்லியன் அமைச்சினூடாக கிடைக்கப் பெற்றது. இந்த ஆண்டு காலப்பகுதியில் பச்சை குட்டை மற்றும் சன்ராமன் ஆகியவற்றின் 1,075 தென்னங்கன்றுகள் தோட்டத்தில் நாட்டப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதுடன் பீடை மற்றும் நோயினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் கப்றுவன விதைத் தேங்காய் உற்பத்திக்காக கை மூலமான மகரந்த சேர்க்கை நிகழ்ச்சித்திட்டமானது மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான தேங்காய் விளைச்சலின் எதிர்வுகூறல்

தாவர உடற்றொழியியல் பிரிவு

பிரதான தென்னை வளர்கின்ற பிரதேசங்களான குருணாகல், குளியாப்பிட்டிய, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்தியங்களில்

காய் உருவாக்க தரவுகள் மற்றும் அதன் பின்னரான தப்பிப்பிழைக்கும் விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2022 ஆம் ஆண்டில் மரமொன்றிலிருந்து பெறக்கூடிய விளைச்சலில் எதிர்பார்க்கப்படுகின்ற மாற்றமானது எதிர்வு கூறப்பட்டது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் குருணாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் விளைச்சலின் வீழ்ச்சி வீதங்கள் முறையே 2% மற்றும் 13% ஆகும். ஆனால் புத்தளம் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் பெறப்படவுள்ள விளைச்சலில் 8% அதிகரிப்பானது எதிர்பார்க்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் (ஜூன் மாதம் வரையில்) இரு மாதங்களுக்கு ஒரு முறை பெறக்கூடிய தேங்காய் விளைச்சலின் எதிர்வு கூறல்கள் வருமாறு ஜனவரி/ பெப்ரவரி (பறிப்பு 1) இற்காக 570.6 ± 29.5 மில்லியன், மார்ச்/ ஏப்ரல் (பறிப்பு 2) இற்காக 503.4 ± 29.0 மில்லியன், மே/ ஜூன் (பறிப்பு 3) மாதத்திற்காக 603.8 ± 32.81 மில்லியன் ஆகும். ஒட்டு மொத்தமாக ஜனவரி தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் பெறக்கூடிய மொத்த தேங்காங்களின் அளவு 1677.7 ± 30.4 மில்லியன் தேங்காய்கள் ஆகும். 2021 ஆம் ஆண்டின் முதலாவது பறிப்பினை விட 2022 இன் எதிர்வு கூறலானது 21% அதிகரிப்பினையும் 2 ஆம், 3 ஆம் பறிப்புக்கள் இரண்டிலும் 2021 ஆம் ஆண்டினை விட முறையே 13% மற்றும் 5% வீத வீழ்ச்சியினை கொண்டிருக்கும். ஆனால் 2021 ஆம் ஆண்டினை விட 2022 ஆம் ஆண்டின் முதல் 3 பறிப்புக்களிலும் 1% வீழ்ச்சியே எதிர்பார்க்கப்படுகிறது.



உரு. 6. 2022 ஆம் ஆண்டில் (ஜூன் வரையான) இரு மாதங்களுக்கொரு முறை பெறக்கூடிய விளைச்சலின் எதிர்வு கூறலானது 2021 ஆம் ஆண்டில் இரு மாதங்களுக்கொரு முறை பெறப்பட்ட வருடாந்த தேசிய தேங்காய் உற்பத்தியுடன் ஒப்பிடப்பட்டது.

தொழினுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள்

தென்னை பயிர்ச்செய்கை மற்றும் பெறுமதி சேர்ப்புக்கான சான்றிதழ் கற்கைநெறி

தொழினுட்ப பரிமாற்றல் பிரிவு

நாட்டில் நிலவிய கொவிட் நோய்த்தொற்றின் காரணமாக தென்னை பயிர்ச்செய்கை மற்றும் பெறுமதி சேர்ப்புக்கான சான்றிதழ் கற்கைநெறியானது நிகழ்நிலை நிகழ்ச்சியாக சூம் தளத்தின் ஊடாக நடாத்தப்பட்டது. சுமார் 90 பங்கேற்பாளர்களுக்காக 8 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

பல்லூடகங்கள் வாயிலாக தொழினுட்ப பரவல் - 2021

வானொலி நிகழ்ச்சிகள்

- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிங்கள தேசிய சேவையில் டிசம்பர் 7, 14, 21 மற்றும் 28 ஆம் திகதிகளில் தென்னை பயிர்ச்செய்கை தொடர்பான நான்கு "சுபாரதி" வானொலி கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் (1 மணித்தியாலம்) ஒலிபரப்பு செய்யப்பட்டன.
- தென்னை பயிர்ச்செய்கை மற்றும் தெங்குச் செய்கையாளர்களின் பிரச்சினை தொடர்பான "கோவிதனட பயக்" வானொலி கலந்துரையாடல் ஒன்று இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிங்கள தேசிய சேவையில் 01-11-2021 அன்று ஒலிபரப்பு செய்யப்பட்டது.

வானொலி விளம்பரங்கள்

- டிசம்பர் மாதத்தில் 620 வானொலி விளம்பரங்கள் சிங்கள தேசிய சேவை மற்றும் வர்த்தக சேவை ஆகியவற்றின் செய்திச் சுருக்கத்தில் (தொடக்கம் மற்றும் முடிவு) ஒலிபரப்பு செய்யப்பட்டன.
- "சிங்கள தேசிய சேவை", "வர்த்தக சேவை", "சிட்டி எப். எம்", "ஆங்கில சேவை", "தென்றல் எப். எம்", "தமிழ் தேசிய சேவை", ருகுணு எப். எம்", "கந்துரட்ட எப். எம்", "ரஜரட்ட எப். எம்", "வயம்ப எப். எம்", "பிறை எப். எம்" மற்றும் "யாழ் எப். எம்" ஆகியனவற்றின் அபிவிருத்தி செய்திகளில் (தொடக்கம் மற்றும் முடிவு) 1230 வானொலி விளம்பரங்கள் டிசம்பர் மாதத்தில் ஒலிபரப்பு செய்யப்பட்டன.

தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகள்

- "ஈரப்பதன் காப்பு" என்ற பெயர் கொண்ட ஒரு கீற்றுச் (crawling) செய்தி நான்கு வாரங்களுக்கு ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.(400 தடவைகள்)
- "செளபாக்கிய கப்றுக" என்ற ஆவணப்பட நிகழ்ச்சியொன்று ஐ. ரீ. என். அலைவரிசையில் டிசம்பர் 11 ஆம் திகதி பி.ப 4.30 க்கு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.
- "செளபாக்கிய கப்றுக" என்ற ஆவணப்பட நிகழ்ச்சியொன்று ரூபவாஹினி அலைவரிசையில் டிசம்பர் 17 ஆம் திகதி பி.ப 7.30 க்கு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

பயிலுனருக்கான பயிற்சி நிகழ்வுகள்

தொழினுட்ப பரிமாற்றல் பிரிவு

பயிலுனர்களுக்கான பயிற்சி நிகழ்வுகள் 25 ஒழுங்கு செய்யப்பட்ட போதிலும் கொரோனா நோய் நிலைமையின் காரணமாக 4 நிகழ்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டன.

மொறட்டுவ கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் சில மாவட்டங்களின் கப்றுக செயற்குழுக்களுக்கு தெங்கு பதனீட்டு ஆராய்ச்சி பிரிவின் உத்தியோகத்தர்களால் தொழினுட்ப பரிமாற்றல் நிகழ்வுகள் சில நடாத்தப்பட்டன.



ஆராய்ச்சி விரிவாக்க கலந்துரையாடல்கள்

தொழினுட்ப பரிமாற்றல் பிரிவு

2021 ஆம் ஆண்டில் இரண்டு ஆராய்ச்சி விரிவாக்கக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. முதலாவது கலந்துரையாடலானது களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, இரத்தினபுரி, மொனராகலை மாவட்ட தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்தியங்களினது கள விரிவாக்க உத்தியோகத்தர்களுக்காக சூம் தொழினுட்பத்தினை பயன்படுத்தி 31-03-2021 இல் நடாத்தப்பட்டது. மற்றைய ஆராய்ச்சி விரிவாக்க கலந்துரையாடல் அனுராதபுரம், பொலநறுவை, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான் 28-7-2021 இல் நடாத்தப்பட்டது.

ஞாயிறு செய்தித்தாள் மூலமான துண்டுப்பிரசுர விநியோகம்

தொழினுட்ப பரிமாற்றல் பிரிவு

இந்த ஆண்டில் பல்வேறுபட்ட தகவல்களை உள்ளடக்கிய 81,250 துண்டுப் பிரசுரங்கள் மீரிகம, தம்பதெனிய, மாகந்துர, நீர்கொழும்பு, தங்கொடுவ, சீதுவ, கொச்சிக்கடை, நாத்தாண்டிய, மாரவில, காக்கபள்ளிய, நிக்கவரட்டிய, பள்ளம, குளியாப்பிட்டிய, ஹெட்டிபொல, பங்கதெனிய, ஆண்டிகம, கிரியுல்ல, கனேமுல்ல, கம்பஹா, மாத்தறை, கம்புறுகமுவ, அகங்கம, காலி, வெயாங்கொட, மரதஹகமுல்ல, கடவத்த, ஜா-எல, களுத்துறை மற்றும் பேருவளை ஆகிய பிரதேசங்களில் பகிரப்பட்டன.

கண்காட்சிகள் மற்றும் பயிர் சிகிச்சை முகாம்

